
Book 8

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்

## இறைவனின் அத்தாட்சி




அதன்மீது பத்தொன்பது உள்ளது

# 19

(Holy Quran : 74 : 30)


ஏப்ரல்
2000
April

PUTHIYA NINAIVOOTAL

TAMIL MONTHLY

# இறைவனால் அங்கீகரிக்கப்படாத மார்க்கம் (42:21)

இன்றைய இஸ்லாம் எந்தளவுக்கு பாழ்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை கீழ்கண்ட அட்டவணை காட்டுகிறது.

| <u>வரம்புமீறப்பட்ட புதிய கண்டு பிடிப்புகள்</u> | <u>குர் ஆனுடைய கொள்கைகள்</u> |
|---|---|
| 1. ஹதீஸ் மற்றும் சுன்னத் | 6:19,38, 114; 7:1, 2, 3; 12:111; 17:46; 31:6; 45:6; 65:38-47; மற்றும் பல |
| 2. மதத்தை விட்டு வெளியேறியவன், என்று இவர்கள் நினைப்பவர்களை கொல்வது | 2:286; 4:90; 10:99;18:29 88:21, 22 |
| 3. கடுமையான குற்றவியல் சட்டங்கள் | |
| 4. விபசாரம் செய்பவர்களைக் கல்லால் அடித்துக் கொல்வது | 24:2, 4:25 |
| 5. நான்காவது முறை மது அருந்துபவர்களைக் கொல்வது | 2:256; 18:29 |
| 6. தொழாதவர்களைக் கொல்லச் சொல்லும் சட்டம் | 2:256; 18:29 |
| 7. மாதவிடாய் பெண்களை வணக்க வழிபாடுகளிலிருந்து தடுப்பது | 2:222 |
| 8. முஹம்மது நபியின் விருப்பத்திற்கு மாறாக அவரை இணைவைப்பது | |
| a. அவர்தான் பெருமைமிக்க தகுதிகள் கொண்டிருக்கும் தூதர் என்றழைப்பது | 2:285 |
| b. அவர் தவறே செய்யாதவர் எனக் கருதுவது | 4:79; 9:117; 17:73-74; 33:37; 40:66; 66:1 80:1-10; 93:7 |
| c. அவருடைய சமாதியை "புனித பள்ளியாக" ஆக்கியது | 2:149-150 |
| d. பரிந்துரை செய்யும் சக்தி அவருக்கு இருப்பதாக கருதுவது | 2:48, 123, 253; 6:70, 94; 7:53; 10:3; 39:44 43:86; 74:48 |
| e. ஒரு குதிரையில் ஏறி ஒளி வேகத்தில் வானத்திற்குச் சென்றதாகவும் இறைவனுடன் பேசி 50 நேரத் தொழுகைகளை 5 நேரமாக மாற்றி பெற்றுக் கொண்டதாக, ஒரு அறிவுக்கு பொருத்தமற்ற கதையை கண்டு பிடித்தது. (ஒளியின் வேகத்தில் சென்றால் அவர் இது வரையிலும் பால்வெளி மண்டலத்தையே தாண்டியிருக்க முடியாது!) | 17:1; 53:1-18 |
| f. தொழுகையிலும், பாங்கிலும் அவர் பெயரைச் சேர்த்தது. | 20;14; 72:18 |

(தொடர்ச்சி பின் அட்டை)

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி


செய்தி 1

ஏப்ரல் 2000
நினைவு 3


குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.


ஆசிரியர் :
C.S. ரஃபியுத்தீன்

துணை ஆசிரியர் :
N.A. அஹமது ஹுஸைன்



தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்


## இதழின் உள்ளே


★ பிஸ்மில்லாஹ்வில் -19

★ இறைவன் மட்டும்

★ அகந்தை

★ எழுத்தறிந்த நபி

★ அர்த்தம் - அனர்த்தம்

★ நேருக்கு நேர்

★ Satan -The Master Hypnotist

★ நரகம் நிரந்தரமானது

# இறைவன் மட்டும்

(மெய்ப்பிக்கும் தூதர் எழுதிய Quran, Hadith, and Islam
என்ற புத்தகத்தில் உள்ள ஒரு கட்டுரையின் மொழியாக்கம்)

---

اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا يُنَادَوْنَ لَمَقْتُ اللّٰهِ اَكْبَرُ مِنْ مَّقْتِكُمْ اَنْفُسَكُمْ اِذْ تُدْعَوْنَ اِلَى الْاِيْمَانِ فَتَكْفُرُوْنَ

قَالُوْا رَبَّنَا اَمَتَّنَا اثْنَتَيْنِ وَاَحْيَيْتَنَا اثْنَتَيْنِ فَاعْتَرَفْنَا بِذُنُوْبِنَا فَهَلْ اِلٰى خُرُوْجٍ مِّنْ سَبِيْلٍ

ذٰلِكُمْ بِاَنَّهٗٓ اِذَا دُعِيَ اللّٰهُ وَحْدَهٗ كَفَرْتُمْ وَاِنْ يُّشْرَكْ بِهٖ تُؤْمِنُوْا فَالْحُكْمُ لِلّٰهِ الْعَلِيِّ الْكَبِيْرِ

"(மறுமை நாளில்) நிராகரிப்போரிடம் கூறப்படும், 'நீங்கள் உங்கள் மேல் கொண்ட கோபத்தை விட இறைவன் உங்கள் மேல் கொண்ட கோபம் கடுமையானதாகும். ஏனெனில் நீங்கள் நம்பிக்கையின்பால் அழைக்கப்பட்டபோது நிராகரித்தீர்கள்" அவர்கள் கூறுவார்கள்: "எங்கள் இரட்சகரே, நீர் எங்களுக்கு இருமுறை மரணமும், இருமுறை வாழ்வும் அளித்தீர், இப்போது நாங்கள் எங்கள் பாவங்களை ஒப்புக் கொள்கிறோம்; **இதிலிருந்து வெளியேற ஏதேனும் வழியுண்டா?"** இது ஏனெனில் இறைவன் மட்டும் என்று கூறப்பட்டபோது நீங்கள் நம்ப மறுத்தீர்கள். ஆனால் அவருடன் இணையாளர்களும் கூறப்பட்டபோது நீங்கள் நம்பிக்கை கொண்டீர்கள். எனவே இப்போது தீர்ப்பு மேலானவரும், மிகப் பெரியவருமான இறைவனிடம் உள்ளது (40:10-12)

இறைவன் மட்டும் என்று கூறப்பட்டால் நீங்கள் நம்பிக்கை கொள்கிறீர்களா?அல்லது அவருடன் மற்றவர்களும் இணைத்துக் கூறப்பட வேண்டுமா?

فَلَمَّا جَآءَتْهُمْ رُسُلُهُمْ بِالْبَيِّنٰتِ فَرِحُوْا بِمَا عِنْدَهُمْ مِّنَ الْعِلْمِ وَحَاقَ بِهِمْ مَّا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ

فَلَمَّا رَاَوْا بَاْسَنَا قَالُوْٓا اٰمَنَّا بِاللّٰهِ وَحْدَهٗ وَكَفَرْنَا بِمَا كُنَّا بِهٖ مُشْرِكِيْنَ

فَلَمْ يَكُ يَنْفَعُهُمْ اِيْمَانُهُمْ لَمَّا رَاَوْا بَاْسَنَا سُنَّتَ اللّٰهِ الَّتِيْ قَدْ خَلَتْ فِيْ عِبَادِهٖ وَخَسِرَ هُنَالِكَ الْكٰفِرُوْنَ

"அவர்களின் தூதர்கள்" அவர்களிடம் தெளிவான ஆதாரங்களுடன் வந்தபோது, அவர்கள் தங்களிடம் ஏற்கெனவே இருந்த கல்வி ஞானத்தைக் கொண்டு திருப்தி அடைந்தார்கள், மேலும் அவர்கள் கேலி செய்து கொண்டிருந்ததே அவர்கள் அழிவுக்குக் காரணமானது. பின் நம்முடைய தண்டனையை அவர்கள் கண்டபோது, அவர்கள் கூறினர்: 'இப்போது நாங்கள் இறைவனை மட்டும் நம்புகிறோம். மேலும் முன்னர் நாங்கள் இணை வைத்ததையும் நிராகரிக்கிறோம். ஆனால் அந்தோ, நம்முடைய வேதனையைக் கண்ட பின்னர் அவர்களின் நம்பிக்கை அவர்களுக்கு எந்தப் பலனும் தராது. இறைவனின் இவ்வித சட்டங்கள் ஒருபோதும் மாறாததாகும். இத்தகைய நிராகரிப்பாளர்கள் அழிந்தார்கள். (40:83-85)

**நீங்கள், உங்கள் அறிஞர்கள், பெரியவர்கள், முன்னோர்கள் ஆகியோரிடமிருந்து பெற்ற அறிவைக் கொண்டு மகிழ்ச்சியும், திருப்தியும் அடைகிறீர்களா?**

**இறைவனின் சட்டங்களுக்காக அத்தகைய அறிவை விட்டுத்தர நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? அல்லது உங்களுக்கு அது மிகவும் தாமதமாகுமா?**

وَاِذَا ذُكِرَ اللّٰهُ وَحْدَهُ اشْمَاَزَّتْ قُلُوْبُ الَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ بِالْاٰخِرَةِ

وَاِذَا ذُكِرَ الَّذِيْنَ مِنْ دُوْنِهٖ اِذَا هُمْ يَسْتَبْشِرُوْنَ

இறைவன் மட்டும் கூறப்பட்டால்" மறுமையை நம்பாதவர்களின் இதயங்கள் வெறுப்பினால் சுருங்கி விடுகின்றன. ஆனால் அவருடன் மற்ற இணையாளர்கள்கூறப்பட்டால் அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். (39:45)

**முடிவில் மிக முக்கியமான கேள்வி**

உங்கள் மனதில் இறைவன் மட்டும் தனித்து இருக்க முடியுமா???

**அல்லது, துதிப்பதற்கும், வணங்குவதற்கும் உங்கள் மனத்தில் இறைவனுடன் மற்றவர்களும் வேண்டுமா???**

உங்கள் மனத்தில் இறைவன் மட்டும் தனித்து இருக்க முடியுமா?

**அல்லது உங்கள் மனத்தில் இறைவன் இருப்பதற்கு முஹம்மத், ஈஸா, மர்யம்,அல்லது மற்ற அவ்லியாக்களின் துணையும் வேண்டுமா?**

**இறைவனைப் பற்றி மட்டும் பேசும்போது நீங்கள் எரிச்சல் அடைகிறீர்களா?**

இறைவனைப் பற்றி மட்டும் பேசும்போது அது உங்களை எரிச்சல் அடையச் செய்கிறதா? இறைவனுடன் மற்றவர்களின் பெயர்களும் கேட்க வேண்டுமா உங்களுக்கு? இறைவன் மட்டும் தனித்து உங்கள் மனத்தில் இருக்க முடியாதா?

நாங்கள் மீண்டும், மீண்டும் இறைவனைப் பற்றி மட்டும் பேசும் போது உங்களுக்கு எதிர்ப்புணர்வு தோன்றுகிறதா? அல்லது இறைவனைப் பற்றி மட்டும் பேசும்போது நீங்கள் மகிழ்ச்சியும், திருப்தியும் அடைகிறீர்களா?

குர்ஆனின்மாபெரும் அளவு கோலின்படி (39:45) இக்கேள்விகளுக்கான விடையை வைத்து நீங்கள் உங்களையும், உங்கள் விதியையும் அறிந்து கொள்ளலாம். (ஆ.ர்)

---

**அரபியர்களின் கட்டுக்கதைகளான ஹதீஸ்களின் குர்ஆனுக்கு அடுத்த நிலையில் முஹம்மதியர்களால் நம்பப்படும் புகாரியின் முதல் பாகம் (தமிழாக்கம்) 39-114 முஹம்மது எழுதப்படிக்க தெரிந்தவர் என்பதை உறுதி செய்கிறது.**

---

**حَدَّثَنَا يَحْيَى بْنُ سُلَيْمَانَ ، قَالَ حَدَّثَنِي ابْنُ وَهْبٍ ، قَالَ أَخْبَرَنِي يُونُسُ ، عَنِ ابْنِ شِهَابٍ ، عَنْ عُبَيْدِ اللَّهِ بْنِ عَبْدِ اللَّهِ ، عَنِ ابْنِ عَبَّاسٍ ، قَالَ لَمَّا اشْتَدَّ بِالنَّبِيِّ صلى الله عليه وسلم وَجَعُهُ قَالَ "" ائْتُونِي بِكِتَابٍ أَكْتُبُ لَكُمْ كِتَابًا لاَ تَضِلُّوا بَعْدَهُ "". قَالَ عُمَرُ إِنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم غَلَبَهُ الْوَجَعُ وَعِنْدَنَا كِتَابُ اللَّهِ حَسْبُنَا فَاخْتَلَفُوا وَكَثُرَ اللَّغَطُ. قَالَ "" قُومُوا عَنِّي ، وَلاَ يَنْبَغِي عِنْدِي التَّنَازُعُ "". فَخَرَجَ ابْنُ عَبَّاسٍ يَقُولُ إِنَّ الرَّزِيَّةَ كُلَّ الرَّزِيَّةِ مَا حَالَ بَيْنَ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم وَبَيْنَ كِتَابِهِ.**

114 இப்னு அப்பாஸ் (ரலி) கூறிய தாவது : நபி (ஸல்) அவர்களுடைய மரண வேதனை அதிகமான "என்னிடம் ஏடு கொண்டு வாருங்கள். எனக்குப் பிறகு நீங்கள் வழி தவறி விடாதவாறு ஒரு மடலை நான் உங்களுக்கு எழுதித் தருகிறேன்" என்றார்கள். (நபி அவர்களின் வேதனையை அறிந்த) உமர் (ரலி) 'நபி (ஸல்) அவர்களுக்கு வேதனை அதிகமாகி நம்மிடம் அல்லாஹ்வின் வேதம் இருக்கிறது. அது நமக்குப் போதுமானது' என்றார்கள். உடனே (தோழர்களுக் கிடையில்) கருத்து வேறுபாடு எழுந்து கூச்சலும் குழப்பமும் மிகுந்து விட்டன. இதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள், "என்னை விட்டு எழுந்து செல்லுங்கள், என் முன்னிலையில் (இது போன்ற) சச்சரவுகள் எதுவும் இருக்கக் கூடாது "என்றார்கள். 'நபி (ஸல்) அவர்களுக்கும் அவர்கள் (எழுத நினைத்த மடலுக்கும் குறுக்கே தடையாக நிகழ்ந்து விட்ட சோதனை பெரும் சோதனை தான் என்று கூறியவர்களாக அங்கிருந்து இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் வெளியேறி விட்டதாக உபைதுல் லார் இப்னு அப்துல்லாஹ் அவர்கள் அறிவிக்கிறார்கள்.

# அற்புதக் கணிதக் கட்டமைப்பில்

# அல்குர்ஆன்

## இறைவனின் முத்திரை 19

கடந்த நினைவூட்டல்களில், இறைவன் தன் திருமறையின் 74 வது அத்தியாயத்தில் நினைவூட்டுவது போல் இறைவனின் சொற்களான குர்ஆனுக்கு , மனிதர்களின் சொல்லான ஹதீஸ்களே ஆதாரம் என்று கூறுவோருக்கு பதிலளிக்கும் விதமாகவும், நம்பிக்கை கொண்டோரின் நம்பிக்கையை அதிகப்படுத்தி வேதம் கொடுக்கப்பட்டோருக்கு உறுதியைக் கொடுக்கும் விதமாகவும், நிராகரிப் போருக்கும், நயவஞ்சகர்களுக்கும் பெரும் சோதனையாக இருப்பதுடன் அவர்களை வெளிப்படுத்தும் விதமாகவும் '19' என்ற எண்ணின் அடிப்படையில் அமைந்த அற்புதத்தின் சில பரிமாணங்களைக் கண்டோம்.

இறைவனின் இவ்வளவு ஆதாரங்களுக்குப் பின்னும், '19' என்ற மிகப்பெரும் அற்புதத்தைப் புரிந்து கொள்ள முயற்சிக்காதவர்கள் உண்மையில் பரிதாபத்திற்குரியவர்களே. மெய்யாகவே மனிதர்கள் தம் இரட்சகரின் வார்த்தைகளில் உறுதி கொண்டவர்களாக இல்லை என்று கூறும், இறைவன் முன்னறிவித்த 'தாப்பத்' பூமியில் ஊர்ந்து செல்லக்கூடிய படைப்பு (பிராணி) கம்ப்யூட்டர் வெளிப்பட்டு உலகப் பொது மொழியான 'கணக்கியலில், எவ்வாறு மனிதர்கள் இறை வேதத்தின் மேல் உறுதி கொண்டவர்களாக இல்லை என்று கூறுவதைக் கேட்கக் கூடிய காதுகள் அவர்களுக்கு இல்லாமல் போனது உண்மையில் அவர்கள் துர்அதிர்ஷ்டமே!

19ன் அடிப்படையிலான இந்த மாபெரும் அற்புதத்தைத் தற்செயல் நிகழ்வு என்று கூறுவோர் உண்மையில் அவர்களின் அறியாமையையே வெளிப்படுத்துகிறார்கள். ஆம். இப்போது நாம் ஒரு காரியம் நடக்கக் கூடிய சாத்தியக்கூறு உள்ளதா இல்லையா. உள்ளது என்றால் அது எவ்வளவு? என்பதைக் கணிக்க முடியும். கணிதத்தில் ஒரு பகுதியே Probablity என்னும் சாத்தியக்கூறு பற்றிய இயல் உலகம் ஒப்புக் கொண்ட Probablity Theory யின் அடிப்படையில் 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்' என்ற இறுதி வேதத்தின் முதல் திருவாசகத்தில் மட்டும் இடம் பெற்றுள்ள '19'ன் அடிப்படையிலான அற்புதம் மட்டுமே தற்செயலாக நிகழக்கூடிய சாத்தியக்கூறுக்கு அப்பாற்பட்டது என்பதை நாம் இங்கே காண்போம். ஆம்! அம்முதல் திருவாசகத்தில் மட்டும் உள்ள அற்புதங்கள்! அது மட்டும்!! எனவே இதனை கண்டறிந்து பிரமிக்கத் தயாராகிக் கொள்ளுங்கள்.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்ற ஆரம்பத் திருவாசகம் பற்பல முறைகளில் மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் 19ன் அடிப்படையில் அற்புதமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. அது பற்றிய விவரங்களை நாம் எளிதில் நினைவில் கொள்ள கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு அட்டவணைகள் நமக்கு உதவும். முதல் அட்டவணை பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம் என்ற வாசகத்தில் உள்ள எழுத்துக்களின் எண் மதிப்பு(Gematrical Value) ஆகும்.

Table 5. The Arabic letters of the Bismillah and their corresponding geometrical Values

| Letter No; | Arabic | English | Gematrical Valu |
|---|---|---|---|
| 1 | ب | B | 2 |
| 2 | س | S | 60 |
| 3 | م | M | 40 |
| 4 | ا | A | 1 |
| 5 | ل | L | 30 |
| 6 | ل | L | 30 |
| 7 | ه | H | 5 |
| 8 | ا | A | 1 |
| 9 | ل | L | 30 |
| 10 | ر | R | 200 |
| 11 | ح | H | 8 |
| 12 | م | M | 40 |
| 13 | ن | N | 50 |
| 14 | ا | A | 1 |
| 15 | ل | L | 30 |
| 16 | ر | R | 200 |
| 17 | ح | H | 8 |
| 18 | ي | Y | 10 |
| 19 | م | M | 40 |

'பிஸ்மி 'யில் இடம்பெறும் 4 வார்த்தைகளும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட விதத்தில் ஒரு கணித அமைப்பில் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பு 'பிஸ்மி'யில் இடம்பெறும் வார்த்தைகள் மற்றும் எழுத்துக்களின் வரிசை எண்களைக் கொண்டும், அவ்வெழுத்துக்களின் எண் மதிப்புக்களைக் கொண்டும் அமைக்கப் பட்டுள்ளது. நம்ப முடியாத அவ்வற்புதங்களைக் காண்பதற்கு முன் அருகே கொடுக்கப்பட்டுள்ள இரண்டாம் அட்டவணையையும் காண்போம்.

Table 6 . The four Words of the Basmallah, the English translation . the number of Arabic letters in each word and their geometrical values

| No; | Arabic | English | #Letters | Geometrical Values | Total Values |
|---|---|---|---|---|---|
| 1 | Bism | In the name | 3 | 2,60,40 | 102 |
| 2 | Allah | God | 4 | 1,30,30,5 | 66 |
| 3 | Al-Rahman | Most Gracious | 6 | 1,30,200,8,40,50 | 329 |
| 4 | Al-Raheem | Most Merciful | 6 | 1,30,200,8,10,40 | 289 |
| | | Total | 19 | | 786 |

மேற்கண்ட இரு அட்டவணைகளிலிருந்தும், பின்வரும் 19ன் அடிப்படையிலான உண்மைத் தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன.

தகவல் 1. முதல் திருவாசகமான 'பிஸ்மி' (சுருக்கமாக) 19 எழுத்துக்களைக் கொண்டது.

தகவல் 2. 'பிஸ்மி'யில் இடம்பெறும் ஒவ்வொரு வார்த்தையின் வரிசை எண்ணையும், தொடர்ந்து அவ்வார்த்தையில் இடம் பெறும் எழுத்துக்களின் எண்ணிக்கையையும் நாம் எழுதினால் நமக்குக் கிடைக்கும் எட்டு இலக்க எண் 19ன் பெருக்குத் தொகை ஆகும். ஒரு முறை அல்ல! இருமுறை!!

13243646 = 19x19x36686.

தகவல் 3. தகவல் இரண்டில் தரப்பட்ட எழுத்துக்களின் எண்ணிக்கைக்குப் பதில் அவ்வார்த்தையின் மொத்த எண் மதிப்பை இங்கே நாம் எழுதுகிறோம் எனவே இங்கே வார்த்தையின் வரிசை எண்ணைத் தொடர்ந்து அவ்வார்த்தையின் மொத்த எண் மதிப்பு எழுதப்படுகிறது. 15 இலக்கம் கொண்ட அவ்வெண் 19ன் பெருக்குத் தொகையே!

1102266 3329 4289 = 19x5801401752331

தகவல் 4. தகவல் 3ல் ஒவ்வொரு வார்த்தையின் மொத்த எண்மதிப்பை எழுதினோம் அல்லவா? இப்பொழுது அவ்வார்த்தைகளில் இடம் பெறும் ஒவ்வொரு எழுத்தின் எண்மதிப்பையும் தனித்தனியாக எழுதுவோம். உதாரணமாக முதல் வார்த்தையின் மொத்த எண்மதிப்பு 102. நாம் அதை 2(பே), 60 (ஸீன்),40(மீம்) என்று பிரித்து எழுதுகிறோம். இவ்விதம் தொடர்ந்து நான்கு வார்த்தைகளுக்கு எழுதப்பட்டால் நமக்குக் கிடைக்கும் 37 இலக்கங்கள் கொண்ட எண் 19ன் பெருக்குத் தொகையே!

<u>12 60 40</u> <u>21 30 30 5</u> <u>3130 200 8 40 50</u> <u>4130 2008 10 40</u>

=19x663369542265954221096 868663843162160

தகவல் 5. தகவல் 4ல் கொடுக்கப்பட்டுள்ள எண் மதிப்புகளுக்கிடையில் ஒவ்வொரு எழுத்தின் வரிசை எண்ணையும் நாம் நுழைப்போம். உதாரணமாக முதல் வார்த்தையில் உள்ள எழுத்துக்களின் எண் மதிப்பு 2, 60, 40 ஆகும். இதில் நாம் எழுத்துக்களின் வரிசை எண்ணை நுழைத்தால் நமக்கு 12260340 என்ற எண் கிடைக்கும். இங்கே வரிசை எண் பெரிய எழுத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விதம் தொடர்ந்து நான்கு வார்த்தைகளுக்கும் செய்தால் நமக்குக் கிடைக்கும் 56 இலக்கம் கொண்ட எண்ணும் 19ன் பெருக்குத் தொகையே!

<u>1 12260340</u> <u>2 1123033045</u> <u>3 11230320048540650</u>
4 1 12303200 48 510 640 = 19x59084389584 ....

தகவல் 6. தகவல் 3ல் ஒவ்வொரு வார்த்தையின் மொத்த எண் மதிப்பைக் குறிப்பிட்டிருந்தோம் அல்லவா? இப்போது அவ்விடத்தில் மொத்த எண் மதிப்பிற்குப் பதில் அவ்வார்த்தையின் முதல் எழுத்தின் எண் மதிப்பையும் கடைசி எழுத்தின் எண் மதிப்பையும் கூட்டினால் வரும் எண்ணை எழுதுவோம். உதாரணமாக முதல் வார்த்தையின் மொத்த எண் மதிப்பு 102. இதற்குப் பதில் இப்போது 42 என்று எழுதுகிறோம். 42 என்பது 2+40 என்பதாகும். இது முதல் வார்த்தையின் முதல் எழுத்தின் எண் மதிப்பும் (2) முதல் வார்த்தையின் கடைசி எழுத்தின் எண் மதிப்பும் (40) ஆகும் இவ்விதமாக இரண்டாவது வார்த்தைக்கு நாம் 66க்குப் பதில் 6(1+5) என்று எழுதுகிறோம். இவ்விதம் தொடர்ந்து 'பிஸ்மி'யின் நான்கு வார்த்தைகளுக்கும் செய்தால் நமக்குக் கிடைக்கும் 11 இலக்க எண்ணும் 19ன் பெருக்குத் தொகையே!

142 26 351 441 = 19x748755339.

தகவல் 7. தகவல் 2லும் 3லும் நாம் உபயோகித்த எண்களை கவனத்தில் கொள்வோம். தகவல் 2ல் ஒவ்வொரு வார்த்தையின் வரிசை எண்ணைத் தொடர்ந்து அவ்வார்த்தையில் இடம் பெறும் எழுத்துக்களின் எண்ணிக்கை (3,4,6,6) எழுதப்பட்டது. தகவல் 3ல் எழுத்துக்களின் எண்ணிக்கைக்குப் பிரதியாய் வார்த்தையின் மொத்த எண் மதிப்பு (102, 66, 329, 289) எழுதப்பட்டது. இப்போது அதே முறையில் வார்த்தையின் வரிசை எண்ணைத் தொடர்ந்து அவ்வார்த்தையில் இடம் பெறும் எழுத்துக்களின் எண்ணிக்கையோடு அவ்வார்த்தையின் மொத்த எண்மதிப்பையும் கூட்டினால் வரும் எண்ணை எழுதுவோம். எனவே முதல் வார்த்தைக்கு நாம் எழுத வேண்டிய எண் (3+102) 105. இரண்டாவது வார்த்தைக்கு (4 +66) 70, மூன்றாவது வார்த்தைக்கு (6+329) 335, நான்காவது வார்த்தைக்கு (6+289) 295.

எனவே இம்முறை ஒவ்வொரு வார்த்தையின் வரிசை எண்ணைத் தொடர்ந்து 105, 170, 335, 295 ஆகியவற்றை இதே வரிசையில் நாம் எழுதினால் நமக்குக் கிட்டும் 15 இலக்க எண் 19ன் பெருக்குத் தொகையே!

அந்த எண் :

**1** 105 **2**70 **3**335 **4**295 = 19x5817212281805.

தகவல் 8. தகவல் 2ல் 'பிஸ்மி' யில் இடம்பெறும் ஒவ்வொரு வார்த்தையின் வரிசை எண்ணைத் தொடர்ந்து எழுத்துக்களின் எண்ணிக்கையை எழுதினோம். இப்போது வார்த்தையின் வரிசை எண்ணைத் தொடர்ந்து, முதல் வார்த்தைக்கு அவ்வார்த்தையில் இடம்பெறும் எழுத்துக்களின் எண்ணிக்கையான 3 என்றும் இரண்டாவது வார்த்தைக்கு 4 உடன் முதல் வார்த்தையின் 3யும் சேர்த்து 3+4=7 என்றும், மூன்றாவது வார்த்தைக்கு 6 உடன் 3+4=7 என்பதையும் கூட்டி 13 என்றும், நான்காவது வார்த்தைக்கு 6 உடன் 3+4+6 =13 என்பதையும் சேர்த்து 19 என்றும் எழுதுகிறோம். இங்கே, நாம் முந்திய வார்த்தையில் இடம் பெறும் எழுத்துக்களின் எண்ணிக்கையை அடுத்த வார்த்தையில் இடம் பெறும் எழுத்துக்களின் எண்ணிக்கையுடன் கூட்டி எழுதுகிறோம். (Comulative Total) இவ்விதம் எழுதினால் நமக்குக் கிடைக்கும் 10 இலக்க எண்ணும் 19ன் பெருக்குத் தொகையே!

இதோ அந்த எண்:

**1** 3 **2** 7 **3** 13 **4** 19

(3+4) (3+4+6) (3+4+6+6)

=19X698 58601

தகவல்9 இத்தகவல் 8 போன்ற ஒன்றாகும். இம்முறையில் எழுத்துக்களின் எண்ணிக்கையை ஒன்றுடன் ஒன்று கூட்டுவதற்குப் பதில் நாம் அவ்வார்த்தையின் மொத்த எண் மதிப்பை ஒன்றுடன் ஒன்று கூட்டுகிறோம். (Cumulative Total) உதாரணமாக பிஸ்மி 'யில் இடம்பெறும் முறையே 102, 66, 329, 289 . எனவே முதல் வார்த்தைக்கு 102 என்றும், இரண்டாம் வார்த்தைக்கு (102 + 66) 168 என்றும், மூன்றாம் வார்த்தைக்கு (102+66+329) 497 என்றும்,நான்காம் வார்த்தைக்கு (102+66+329+289) 786 என்றும் எழுதுகிறோம்.

எனவே இம் முறை வார்த்தையின் வரிசை எண்ணைத் தொடர்ந்து எண் மதிப்பின் கூட்டுத் தொகையை எழுதினால் நமக்குக் கிட்டும் 16 இலக்க எண்ணும் 19ன் பெருக்குத் தொகையே!

இதோ அந்த எண்:

1 102 2 168 3 497 4 786

(102+66) (102+66+329) (102+66+329+289)

= 19 x 5801 1412367094

இவை மட்டுமல்ல, இது போன்ற இன்னும் பற்பல வடிவங்களில் 'பிஸ்மி' யில் சம்பந்தப்பட்ட வார்த்தைகளும், வார்த்தைகளின் வரிசை எண்களும், வார்த்தைகளின் எண் மதிப்புக்களும், இன்னும் அதனுடன் சம்பந்தப்பட்ட பற்பல விஷயங்களும் அற்புதமாக, நம்ப முடியாத விதத்தில், ஆனால் கண் கூடாக 19ன் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. விரிவஞ்சி நாம் இத்துடன் இங்கு விட்டு விடுவோம். (அனைத்துத் தகவல்களையும் தெரிந்து கொள்ள விரும்புவோர் Websiteல் 'Beyond Probablity' என்ற பகுதியில் பார்த்து அறிந்து கொள்ளலாம். அல்லது Beyond Probablity என்ற புத்தகமும் உள்ளது. அதை Xerox செய்து பெற்றுக் கொள்ளலாம்).

இன்னும் பற்பல தகவல்கள் இருந்தாலும் இதுவரை நாம் கண்ட தகவல்களே இக்கட்டமைப்பு, மனித சக்திக்கு அப்பாற்பட்டது என்றும் தற்செயலாக நடந்திருக்கக் கூடிய சாத்தியமற்றது என்பதையும் அறிந்து கொள்ளப்போது மானதாகும்.

## தற்செயலானதா அல்லது இறைவன் வடிவமைத்ததா?

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்ற திருவாசகத்தில் உள்ள நான்கு வார்த்தைகளும், 19 எழுத்துக்களும் பற்பல கூட்டமைப்பில் இப்படி 19ன் அடிப்படையில் அமைக்கப்பட்டிருப்பது மிகவும் ஆச்சர்யகரமான, அற்புதமான ஒரு விஷயமாகும். இவ்வெண்களின் கூட்டமைப்புக்கள் ஏனோதானோவென்று அமைக்கப்பட்டவையல்ல. அவை ஒன்றுக் கொன்று ஒப்பானவையாக உள்ளன. உதாரணமாக இப்போது நாம் கண்ட தகவல்கள் அனைத்தும் கீழ்க்கண்ட அமைப்பில் உள்ளன.

1? 2? 3? 4? = n=19x.....

இங்கே 1 முதல் 4 வரை உள்ள எண்கள் 'பிஸ்மி 'யில் இடம் பெறும் நான்கு வார்த்தைகளைக் குறிக்கும். அவற்றின் அருகில் உள்ள கேள்விக்குறிகள் எந்த ஒரு எண்ணையும் குறிக்கலாம். ஆனால் விடையாக வரும் எண். (n) 19ன் பெருக்குத் தொகையாக உள்ளது. இங்கே நாம் கண்டவற்றில் தகவல் 2 முதல் 9 வரை இதே அமைப்பில் அமைந்திருப்பதற்கு இரண்டு விளக்கங்கள் கூறப்படலாம். ஒன்று இவை அனைத்தும் தற்செயல் நிகழ்வுகளே, என்பது. மற்றொன்று 'பிஸ்மி' இவ்விதம் 19ன் அடிப்படையில் ஒரு அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது என்பது. எது

அறிவுக்குப் பொருத்தமானது என்பதை நாம் (Probablity Theory) சாத்தியக்கூறு அறிவியலின் அடிப்படையில் காண்போம்.

முதலில் இத்தகைய அமைப்பு தற்செயலாக நிகழ்ந்தது என்றால், அவ்வாறு நிகழ்வதன் சாத்தியக்கூறு என்ன? நம்மால் அந்தச் சாத்தியக் கூறைக் கணக்கிட முடியுமா? முடியும் என்றால் எப்படி?

தற்செயலாக நிகழ்ந்தது என்ற நமது அனுமானத்தின் அடிப்படையில் தகவல் 2-9ல் உள்ள அனைத்து எண்களையும் எந்த ஒரு எண்ணாகவும் எண்ணிக் கொள்ளலாம் (Random Number)

பல்வேறு எண்கள் ஒன்று சேர்ந்து இத்தகைய அமைப்பில் (1? 2? 3? 4?) வருவது மட்டுமல்ல. விடையாக வரும் எண். 19ன் பெருக்குத் தொகையாகவும் இருக்க வேண்டும் என்பதன் சாத்தியக்கூறைக் கணக்கிட வசதியாக நாம் சில அனுமானங்களைச் (assumptions) செய்து கெள்வோம். உதாரணமாக கேள்வி குறியிட்ட எண்கள் அனைத்தையும் ஒரு இலக்க எண்ணாக எண்ணிக் கொள்வோம். பல எண்களைக் கொண்டதென்றால் நாம் சாத்தியக்கூறைக் கணக்கிட மிகவும் சிரமப்பட வேண்டும்.

இம்முறையில் விடையாக வரும் 'n' என்ற எண் 8 இலக்கங்கள் கொண்டதாக அமையும். ஏனெனில் மற்ற நான்கு எண்கள் (1,2,3,4) ஒரு இலக்கம் கொண்டதாக உள்ளது என்பதை நாம் அறிவோம்.

இப்போது நாம் எட்டு இலக்கங்கள் கொண்ட எந்த ஒரு எண்ணும் (Random Number) இத்தகைய அமைப்பில் வருவது என்றால் அதன் சாத்தியக்கூறு என்ன என்பதை நாம் இலகுவாகக் கணக்கிட முடியும்.

நாம் இதை எவ்வாறு செய்ய முடியும் என்பதைக் காண்போம். நாம் இப்பொழுது, ஒரு லாட்டரியில் கலந்து கொள்வதாகக் கற்பனை செய்து கொள்வோம். இந்த லாட்டரியில் நாம் எட்டு எண்கள் எடுக்க வேண்டும்.(0-9 வரை உள்ள ஒரு இலக்கம் கொண்ட எண்) கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றுபவர் 'ஜாக்பாட்' பரிசைப் பெறுகிறார்.

1. முதல் எண் 1 ஆக இருக்க வேண்டும்.
2. மூன்றாம் எண் 2 ஆக இருக்கவேண்டும்.
3. ஐந்தாம் எண் 3 ஆக இருக்க வேண்டும்.
4. ஏழாம் எண் 4 ஆக இருக்க வேண்டும்.

எல்லா எண்களையும் அருகருகே அமைத்தால் வரும் எண். 19ன் பெருக்குத் தொகையாக இருக்க வேண்டும்.

இப்போது நாம் எடுக்கும் எட்டு இலக்க லாட்டரி எண்கள் 00000000 முதல் 999 999 99 வரை இருக்கும். அதாவது அதில் பத்துக்கோடி எண்களின் கூட்டமைப்புக்குச் சாத்தியம் உள்ளது. இந்த எண்களின் இடையில் நம் லாட்டரியில் வெற்றி பெறக்கூடிய தகுதி உள்ள எண்கள் எத்தனை?

இதற்கான விடை நமக்குத் தெரிந்தால், இந்த லாட்டரியில் எத்தனை பேருக்கு ஒருவர் வெற்றி பெறுவதற்கான சாத்தியக்கூறு உள்ளது என்பதை நாம் கணிக்க முடியும்.

இக்கேள்விக்கு விடை தேடி, 0 முதல் 999 999 99 வரை உள்ள எண்களில் நம் லாட்டரியில் வெற்றி பெறத் தகுதிபெற்ற எண்கள் எத்தனை என்பதைக் கணிக்க ஒரு Computer Programme அமைக்கப்பட்டது. அந்த Programme 527 எண்களின் கூட்டமைப்பு இந்த லாட்டரியில் வெற்றி பெறக்கூடிய தகுதி உள்ள எண்கள் என்று கூறியது. மேற்கண்ட தகுதி உடைய முதல் எண்ணாக 10,20,3247 ஐயும் கடைசி எண்ணாக 19,29,3949 என்ற எண்ணையும் காட்டியது. எனவே இந்த லாட்டரியில் வெற்றி பெறுவதற்கான சாத்தியக்கூறு பத்துக்கோடி எண்களில் 527 அதாவது 1,89,753 (ஒரு லட்சத்து எண்பத்தொன் பதாயிரத்து எழுநூற்றி ஐம்பத்து மூன்றில் ஒன்று)

இவ்விஷயங்களிலிருந்து, தகவல் 2ல் கூறப்பட்ட விஷயம் தற்செயலாக நடப்பதற்கான சாத்தியக்கூறு 1,89,753ல் ஒன்றே ஒன்றுதான் என்பதை நாம் அறிகிறோம்.

இப்போது, தகவல் 2ம் 3ம் தற்செயலாக நடப்பதற்கான சாத்தியக்கூறு , நாம் இந்த லாட்டரியில் 2 முறை வெற்றி பெறுவதைப் போன்றதாகும். எனவே, அதைக் கணிக்க நாம் 1,89,753ஐ 1,89,753 ஆல் பெருக்க வேண்டும்.

1,89,753 x 1,89,753 = 36, 006, 201, 009 அதாவது, தகவல் 2லும் 3லும் உள்ள

விஷயங்கள் தற்செயலாக நடப்பதற்கு சாத்தியக்கூறு 36 ஆயிரம் கோடியில் ஒன்றே ஒன்றுதான்.

இப்போது தகவல் 2,3,4 ஆகியவற்றில் உள்ள விஷயங்கள் தற்செயலாக

நடந்திருக்கக் கூடிய சாத்தியக்கூறு என்ன என்பதைக் கணிக்க நாம், 1,89,753 ஐ அதைக் கொண்டே மூன்று முறை பெருக்க வேண்டும்.

189753 x 189753 x 189753 = 6,832, 284, 660, 060, 777

மேற்கண்ட எண் நூறு கோடி கோடி என்பதை நெருங்கியதாக உள்ளது. மேற்கண்ட எண் எத்தனை என்பத அறிந்த கொள்ளவே நாம் சிறிது சிரமப்பட வேண்டி இருக்கிறது.

எனவே தகவல் 2,3,4 ஆகியவற்றில் உள்ள விஷயங்கள் தற்செயலாக நடப்பதற்குசாத்தியக்கூறு நூறு கோடிக்கோடியில் ஒன்றாகும்.

நாம் மேலே கண்டபடி மூன்று தகவல்களில் உள்ள விஷயங்கள் தற்செயலாக நடப்பதற்கு உள்ள சாத்தியக்கூறு இவ்வாறென்றால், மேலும் மேலும் நம்மிடம்

உள்ள தகவல்கள் நடப்பதற்கான சாத்தியக்கூறு '0' ஆக ஆகிவிடும் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். அதாவது, அவ்வாறு நிகழ்வதற்கான சாத்தியக்கூறு இல்லவே இல்லை! எனவே இதன் பின்னரும் 'பிஸ்மி 'யில் மட்டும் இடம்பெற்ற 19ன் கட்டமைப்பு தற்செயலானது என்பது அறிவுக்கு ஒவ்வாத ஒரு கூற்றாகும்.

தற்செயலாக நடந்தது, இல்லை என்று ஆகிவிட்டால், 'பிஸ்மி' இவ்விதம் அற்புதமான முறையில் பற்பல விதத்தில் ஒருவரால் 19ல் கட்டமைக்கப் பட்டிருக்கிறது என்பதை நாம் ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. அந்த ஒருவர் சாத்தியமற்றதையெல்லாம் சாத்தியமாக்கும் வல்லமை உள்ள அந்த ஒரே இறைவனைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்? முடிவெடுக்க வேண்டியது தனிமனிதர்களின் பொறுப்புத்தான்!

முடிப்பதற்கு முன் இரண்டு உபரித்தகவல்கள்.

1. பிஸ்மி இடம் பெறும் மூன்றே மூன்று எண்களைக் கொண்டு அமைக்கப்பட்ட விஷயம் இது. 'பிஸ்மி'யில் இடம் பெறும் வார்த்தைகள் 4 என்றும், இடம்பெற்றுள்ள எழுத்துக்கள் 19 என்றும், அதன் எண் மதிப்பு 786 என்றும் இப்போது நாம் அறிந்திருக்கிறோம். இப்போது நாம் இந்த எண்களை அருகருகே அமைப்போம். நமக்குக் கிட்டும் 6 இலக்க எண் 19ன் பெருக்குத் தொகையே!

419786 = 19x22094

(முஸ்லிம் அறிஞர்களே! பிஸ்மியின் மொத்த எழுத்துக்கள் 19 என்பதில் இன்னுமா குழப்பம்?)

2. 'பிஸ்மி' குர்ஆனின் முதல் வசனமாகும். அதில் 19 எழுத்துக்கள் இடம் பெறுகின்றன. அதில் நான்கு வார்த்தைகள் உள்ளன. அவற்றில் இடம் பெறும் எழுத்துக்கள் முறையே 3,4,6,6. இத்தகவல்களின் அடிப்படையில் நாம் ஒரு எண்ணை அமைப்போம். முதலில், முதல் வசனம் என்பதைக் குறிக்க 1, தொடர்ந்து அதில் இடம் பெறும் 19 எழுத்துக்கள் என்பதை எழுதி, தொடர்ந்து ஒவ்வொரு வார்த்தை யிலும் இடம் பெறும் எழுத்துக்களின் எண்ணிக்கையையும் எழுதுவோம். இவ்வாறு செய்தால் நமக்குக் கிட்டும் 7 இலக்க எண் 19ன் பெருக்குத் தொகையே!

1 19 3 466 = 19 x 62814 ஒருமுறை மட்டுமல்ல, இவ்வெண்ணை மீண்டும் 19 ஆல் வகுத்துப் பாருங்கள். 62814 = 19 x 3306. இருமுறை மட்டுமல்ல, விடையாக வரும் எண்ணை மீண்டும் ஒருமுறை 19 ஆல் வகுத்துப் பாருங்களேன்!

3306 = 19x174. ஆம்! அவ்வெண் ஒருமுறை அல்ல, இருமுறை அல்ல, மூன்று முறை 19 ஆல் வகுபடுகிறது!

(தொடரும்)

# அகந்தை
## (EGO)

மூஸா தன் கூட்டத்தாரை நோக்கி:- என்னுடைய மக்களே! காளைக் கன்றினை வழிபட்டதன் மூலம் உங்களுடைய ஆத்மாக்களுக்கே நீங்கள் தவறிழைத்துக் கொண்டு விட்டீர்கள். ஆகையால், உங்களைப் படைத்தவரிடம் நீங்கள் மன்னிப்புக் கோர வேண்டும். மேலும் உங்களின் 'அகந்தையினை (EGO) (ஒடுக்கி) கொல்ல வேண்டும். உங்களைப் படைத்தவரிடம் இது உங்களுக்கு மிக்க மேலானதாகும் என்று கூறியதை நினைவு கூறுங்கள். அவர் உங்களை மன்னித்தார், ஏனெனில் அவர் மன்னிப்பாளர், மாபெருங் கருணையாளர். (2:54)

மேற்சொன்ன குர்ஆன் வசனத்தில் இடம் பெறும். 'ஃபக்துலு அன்ஃபுஸகும்' எனும் வாசகம் நமக்குக் கூறுவது என்னவெனில் நாம் நம்முடைய அகந்தையினை நம்மி லிருந்து களைந்து விடவேண்டும் என்பதே. அதனை ஆங்கிலத்திலே 'ஈகோ' (E G O ) என்பர். ஆகவே ஈகோ என்னும் வார்த்தைக்கு ஆங்கில அகராதி என்ன விளக்கம் தருகிறது என்பதைப் பார்த்துவிட்டு பிறகு அதனைப் பற்றிக் குர்ஆன் என்ன கூறுகிறது என்பதையும் பார்ப்போம்.

ஈகோ எனும் வார்த்தைக்கு ஆங்கில அகராதி விளக்கத்தின் **தமிழாக்கம் :**

தன்னையும் தன் தனித்துவத்தையும் தெரிந்து கொண்ட நிலையில் தன் எண்ணங்கள் மற்றும் செயல்பாடுகளின் இலட்சியங்களை தன் எண்ணம், உணர்வு மற்றும் செய்கையின் மூலம் மற்றவரிலிருந்து தன்னை தனித்துக் காட்டும் முயற்சி.

ஆங்கில அகராதிப்படி இவ்வளவுதான் நமக்குக் கொடுக்கப் பட்டுள்ள விளக்கம். ஆகவே நாம் அதிகம் அறிய குர்ஆனை ஆராய்வோம்.

தூதர்களைத் தனித்துவப் படுத்து வதிலிருந்து இறைவன் நம்மை ஏன் தடுக்கிறார். இவ்வாறு தனித்துவப் படுத்தாதீர் என்பதிலிருந்தே சிலர் சிலரைவிட மேம்பட்டவராயிருப் பார் என்பதும், மற்றவரை விட சிலர் பின்பற்றப்பட வேண்டும் என்பது மாக தொனிக்கிறதல்லவா? அவ்வாறு தொனிக்கிறதென்றால் அது நிச்சயமாக் நம்முடைய குற்றமே. ஏனெனில் தூதர்கள் இறை வழிகாட்டுதல்களுக்கு ஒரு கருவியாய் மட்டுமே இருக்கிறார்கள். ஆகவே இங்கு நாம் வழிகாட்டுதல்களைத் தான் பின்பற்ற வேண்டுமேயன்றி, வழி காட்டிய வரை அல்லவே.

இந்த ரீதியாகவே, நம்மில்,

ஒருவர் மற்றவரிலிருந்து தனித்துவப் படுத்திக் கொள்வது ஒருவர் மற்றவரை விட இயல்பிலேயே உயர்வானவர் என்பதாகக் காட்டிக் கொள்வதாகும். ஆனால் குர் ஆனைப் பார்ப்போமானால் மக்களைத் தரம் பிரிப்பது பயபக்தி (49:13) மட்டும் தான் என்பதை நாம் அறியலாம். மேலும் பயபக்தியை அவர் தான் நமக்குத் தர வேண்டும். ஏனெனில்,

பயபக்தியின் மூலாதாரம் அவர் தான்

மன்னிப்பின் மூலாதாரம் அவர் தான் (74:56)

நம்முடைய அகந்தை (E G O ) யானது நம்மை மற்றவரிலிருந்து தனியாய், மற்றவரைவிட உயர்வாய் காட்டச் சொல்லி நம்மை ஏவும். மேலும் அது, நமக்கு ஏதோ ஒரு சக்தி, ஒரு அடக்கும் வலிமை, ஒரு செல்வாக்கு இருப்பதாக நம் கண்முன்னே ஒரு மாயத் தோற்றத்தை உணரவைக்கும். நம்முடைய தனிப்பட்ட கருத்துக் களுக்கு, நம்முடைய ஆசாபாசங் களுக்கு, நம்முடைய விட்டுக் கொடுக்காத் தன்மைகளுக்கு மட்டுமே முக்கியத் துவம் கொடுக்கும்.

அந்த அகந்தை தான் முதன் முதலில், மேலுலகத் தர்க்கத்தின் போது, இறைவனின் ஏகபோக அதிகாரத்தை ஏற்றுக் கொள்ள விடாமல் செய்து நம்மை நிலை குலையவைத்தது. அதன் நிமித்த மாகவே நாம் இப்பூவுலக வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டிருக் கிறோம். என்ன ஒரு சோதனை! இதுவே நாம் மீள்வதற்கான கடைத் தேர்வு. கருணை மிக்க நம் இறைவனால் தரப்பட்ட கடைசி வாய்ப்பை, மூன்றாவது வாய்ப்பை நழுவவிடாமல் பயன்படுத்தி ஈடேறு வோம்.

அடுத்ததாக, குர்ஆன் நமக்கு, நம்முடைய அகந்தையை நாம் கொல்ல வேண்டும் எனும் கட்டளைகளைக் காட்டிலும், அதனை நாம் பின்பற்றியதால் உண்டான விளைவுகளைத்தான் அதிகம் படம் பிடித்துக் காட்டுகிறது. அச்சம்ப வங்களில் சில:

உலகத்தின் முதல் கொலையா ளியின் அகந்தையே அவருடைய சகோதரரைக் கொல்ல அவரை ஏவியது என்பதைக் குர்ஆன் வசனம் 5:30 நமக்கு எடுத்துக் காட்டுகிறது அதன் மூலம் நாம் பாடம் பெறுவோமாக.

யூசுப் நபியைத் தன் வயப்படுத்த எண்ணி அவரை ஆசை காட்டிய ஆளுநரின் மனைவியின் வாயிலாக குர் ஆன் நமக்கு மற்றுமொரு உதாரணத்தின் மூலம் போதிப்பது "சுயம் (சிந்தை) என்பது கெட்டதை, ஏவக் கூடியதாக இருக்கிறது" (12:53)

நம்முடைய அகந்தை (EGO) யைப் பின்பற்றினால் இறைவனின் நற்பேற்றில் இருந்து நம்மைத் தள்ளி நிறுத்தி அதலபாதாளத்தில் தள்ளிவிடும் என்பதற்கு கீழ்க் காணும் குர்ஆன் வசனம் சான்று.

**எவர்கள் தங்கள் இரட்சகரால் தெளிவூட்டப்பட்டு இருக்கி றார்களோ அவர்களும் தங்களின் காரியங்கள் அழகாகக் காண்பிக் கப்பட்டதால் தங்கள் சுய அபிப்பிராயங்களைப் பின்பற்றவும் செய்கிறார்களோ அவர்களும் ஒன்றா?**

இறுதியாக, அல்லாஹ்வின் போதனையான "மக்களிடையே நீதியோடு ஆட்சி செலுத்து வீராக! மேலும் - உம்முடைய . சுய அபிப்பிராயத்தைப் பின்பற்றாதீர்! அதனால்
அல்லாஹ்வின் வழியிலிருந்து நீர் விலகி விடாதிருப்பதற்காக! எனும் 38:26 அறவுரையின் மூலம் தன் மன்னிப்புக் கோரலை, பாவ மீட்சியைப் பலப்படுத்திக் கொண்ட தாவூது நபியின் உதாரணமும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

பணிவுடைமையே அகந்தையின் எதிரி. அதன் முக்கியத்துவம் வேதங்கள் எங்கு நோக்கினும் விரவிக்கிடக்கிறது.
உதாரணத்திற்கு, லுக்மான் அவர்கள் தனது மகனுக்குப் பகர்ந்த அறிவுரையிலிருந்து.

"மக்களை நீ ஆணவத்துடன் நடத்தாதே! மேலும் பூமியில் பெருமையுடன் நடக்கவும் செய்யாதே! ஆணவங் கொண்டு தன்னைக் காட்டிக் கொள்வோரை அல்லாஹ் விரும்புவதில்லை. பணிவுடன் நட! மேலும் உன் குரலைத் தாழ்த்திக் கொள்! ஏனெனில் குரல்களில் மிகவும் கேட்க வொண்ணாதது கழுதையின் குரலே! (31:18, 19)

(அதிக உதாரணத்திற்கு 17:37 மற்றும் 25:63 ஐ உவப்புடன்பார்க்க)

முந்தைய வேதத்தில் இருந்து ஓர் உதாரணம்: -

"மனிதனின் தற்பெருமை, அவ னுக்கு அவமரியாதை, ஆயினும், என் ஆத்மா பணிகிறதோ அவனுக்குப் பெருமை உண்டு (29:23) (பழமொழிகள்) அகந் தையே (Ego) ஒருவனுக்கு கடவுளாய் ஆகிய விட்டதைப் பற்றி அல்லாஹ் நமக்கு (25:43) உரைக்கிறார். அது, **"தன் அகந்தையினை தெய்வமாய் ஆக்கிவிட்ட ஒருவனை, நீர் பார்த்தீரா? நீர் அவனுக்கு வக்கீலாய் ஆகப்போகிறீரா? (25:43)**

ஆகவே, எவ்வாறு நம்முடைய அகந்தை (E g o ) யை நாம் கிள்ளி எறிந்து கொல்லப் போகிறோம்? இதனைச் செய்வதற்கான பல வழிமுறைகளை இறைவன் நமக்கு தந்துள்ளார். உதாரணமாக, ஒருவரிடமிருந்து வீசப்படும் விமரிசனங்களைக் கொண்டு அதனைச் சீர்செய்வது ஒரு வழி முறையாக இங்கு தரப்பட் டுள்ளது. நீங்கள் உங்கள் தரப்பு நியாயங்களை எடுத்து வைப்பதை காட்டிலும் ஒத்துக் கொண்டு அதன் மூலம் உங்களது அகந்தையை குறைக்க முயலுங்கள். எதிராளியின் குற்றச்சாட்டு சரியானதாக இல்லாத போதிலும், நீங்கள் அதனை உங்களுக்கு சாதகமாக பிரயோகித்

துள்ளீர்கள். ஏனெனில் சொல்லிப் புரியவைப்பதை விட செய்வது சுலபமல்லவா?

ஒவ்வொரு முறை நாம் தவறு செய்து விட்ட பின் அதனை நினைத்து மனம் வருந்தி, பாவமன்னிப்புக் கோரி, திரும்பவும் தவறிழைக் காமலிருக்க முயலும் போது நாம் நம்முடைய அகந்தை யைக் கொன்று கொண்டு வருகிறோம். நாம் ஒரு நற்செயலைச் செய்யாதிருந்த ஒவ்வொரு முறையும், நேர்மையுடன் நடக்காதிருந்த ஒவ்வொரு முறையும், நெறிதவறிய ஒவ்வொரு முறையும், வீண் வாதங்களிலும், கிசுகிசுக்களிலும், வம்பளப்பதிலும் நேரத்தை செலவிட்ட ஒவ்வொரு முறையும், அதனை எண்ணிச்சீர் செய்ய முயலும் போது நம்முடைய அகந்தையைக் கொல்கிறோம். இங்கு வருத்தத்திற்குரிய விஷய மாவது, இந்த அகந்தை என்பது வெட்ட வெட்ட உள்ளத்தில் ஊடுருவி வளரும் ஒரு களைப் பயிர் போன்றது. எனவே அதை நீங்கள் அகற்றி விட்டதாக எண்ணி (இறுமாந்து) கொண்டிருக்கும் வேளையிலேயே திரும்பவும் முளைவிட தயாராகி விட்டிருக்கும். ஆகவே, அல்லாஹ் மட்டுமே நம்முடைய அகந்தையை நாம் விட்டொழிப்பதில் துணையா யிருக்க முடியும் என்பதை ஞாபகத்திலிருத்திக் கொள்ள வேண்டும். எனினும், ' 'தங்களை மாற்றிக் கொள்ளத் தாங்களே முன்வராத எந்த ஒரு சமுதாயத்தின் நிலையையும் அல்லாஹ் மாற்று வதில்லை" (13:11)

# எழுத்தறிந்த நபி

## முஹம்மத் நபி தன கரங்களால் குர்ஆனை எழுதினார்

(டாக்டர் ரஷாத் கலீஃபாவின் குர்ஆன் மொழிபெயர்ப்பின் இணைப்பு 28லிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டது)

முதல் வெளிப்பாடு 'படி'யுங்கள் என்பதாகும். மேலும் இறைவன் பேனாவைக் கொண்டு கற்றுக் கொடுக்கிறார் என்பதாகும். இண்டாவது வெளிப்பாடு 'பேனா' என்ற அத்தியாயம் ஆகும். (68:1) பேனாவின் ஒரே வேலை எழுதுவது மட்டுமே.

குர் ஆன் இறக்கப்பட்ட பின் முதல் இரண்டு நூற்றாண்டுகளில் வாழ்ந்த இஸ்லாமிய அறிஞர்களால் 'இதைப்போன்ற ஒன்றைக்கொண்டு வாருங்கள் என்ற குர்ஆனின் சவாலைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர் களுக்குக் குர்ஆனின் அற்புதக் கணிதக் கட்டமைப்பைப் பற்றிய எந்த ஞானமும் இல்லை. மேலும், பல இலக்கிய மேதைகள் குர்ஆனுடன்

ஒப்பிடக்கூடிய அளவுக்கு உள்ள இலக்கியங்களைச் செய்யக்கூடும் என்பதையும் அவர்கள் அறிந்திருந் தார்கள். உண்மையில் இத்தகைய பல இலக்கிய மேதைகள், குர்ஆனுக்கு இணையான இலக்கியத் தரமுடைய நூல்களைத் தங்களாலும் எழுத முடியும் என்று கூறவும் செய்தார்கள். எகிப்தைச் சேர்ந்த சமீபகால எழுத்தாளரான தாஹா ஹுசைன் அவ்வாறு கோரியவர்களில் மிகவும் பிரபல மானவர் ஆவார்.

எனவே, அறியாமை நிறைந்த இஸ்லாமிய அறிஞர்கள் முஹம்மத் நபியை கல்வி கற்காத மனிதர் என்று அறிவிக்க முடிவு செய்தார்கள். குர்ஆனின் மிகச் சிறப்பான இலக்கியத் தரத்தையே இதன் மூலம் உண்மையான அற்புதமாகக் காட்ட முடியும் என்று அவர்கள் எண்ணிக் கொண்டார்கள். நபியை, கல்வி கற்காதவர் என்று கூறுவதற்கு அவர்கள் சார்ந்திருந்த வார்த்தை 'உம்மி' என்பதாகும். ஆனால் இந்த அறிஞர்களின் துரதிருஷ்டம், அவ்வார்த்தையின் தெளிவான அர்த்தம் (G e n t i l e ) - எந்த வேதத்தையும் (தவ்ராத், இன்ஜீல், குர்ஆன்) பின்பற்றாதவன் என்பது மட்டுமே (பார்க்க 2:78; 3:20,75; 62:2) அதற்கு அர்த்தம் (கல்வி கற்காதவர் என்பது அல்ல)

நபி ஒரு வெற்றிகரமான வியாபாரியாக இருந்தார். அவர் கல்வி கற்காதவர் என்ற பொய்யை, இட்டுக்கட்டிய 'இஸ்லாமிய அறிஞர்கள்' நபியின் காலத்தில் 'எண்கள்' இல்லை என்பதை மறந்து விட்டார்கள். அரிச்சுவடியில் உள்ள எழுத்துக்களே எண்களாகப் பயன் படுத்தப்பட்டு வந்தன. ஒவ்வாரு நாளும் எண்களுடன் புழங்கும் ஒரு வியாபாரியாக, நபிக்கு அரிச்சுவடி தெரிந்திருக்க வேண்டும். ஒன்று முதல் ஆயிரம் வரை.

முஹம்மத் நபி குர்ஆனை எழுதினார் என்று குர்ஆன் நமக்குக் கூறு கிறது. முஹம்மதின் சமகாலத் தவர் கூறினர் "இவை கடந்தகாலப் புராணங்களே, அவற்றை அவர் எழுதிக் கொள்கிறார். அவை அவருக்கு இரவும் பகலும் எழுதிக் கொள்வதற்காகக்கூறப்படுகின்றன. (25:5). ஒரு கல்வி கற்காத மனிதரிடம் 'எழுதிக் கொள்ளும்படி' கூற முடியாது. நபியை கல்வி கற்காதவர் என்று குற்றம் சாட்டும் அவரது எதிரிகள் 29:48 வசனத்தை துஷ்பிரயோகம் செய்கின்றனர். அது 'முந்திய வேதங்களை' என்று குறிப்பிட்டுக் கூறுகிறது.

ஹிஜ்ரி 13 வருடங்களுக்கு முன்பு ரமலான் 27ம் இரவு, முஹம்மத் என்ற ஆன்மா, உண்மையான அவர், அவர் உடல் அல்ல, மிக மேலான வானத்திற்கு அழைக் கப்பட்டு அங்கே அவருக்கு 'அல்குர் ஆன்' கொடுக் கப்பட்டது. (2:97, 17:1, 44:3, 53:1-18, 97:1-5).

அதன் தொடர்ச்சியாக (பூமியில்) வானவர் ஜீப்ரில் முஹம்மதின் ஆன்மாவிலிருந்து முஹம்மதின் நினைவுக்கு சில குர்ஆன் வசனங்களை ஒவ்வொரு நேரத் திலும் கொண்டு வரவும் அவற்றை வெளிப்படுத்தவும் உதவி செய்தார்.

முஹம்மத் நபி தன் நினைவுக்கு வந்தவுடன் குர் ஆன் வசனங்களை எழுதிக் கொள்ளவும் நினைவில் வைத்துக் கொள்ளவும் செய்தார். நபி தன் இறப்பின் போது, இறக்கப்பட்ட வரிசையில், அதில் எந்த இடத்தில் எந்த வசனம் இடம்பெற வேண்டும் என்ற குறிப்பிட்ட விதிகளுடன், தன் கரங்களால் எழுதப்பட்ட ஒரு முழுமையான குர் ஆனை விட்டுச் சென்றார்.

இவ்வுலக மக்களுக்கான இறுதி வேதத்தை அதன் இறுதி வடிவத்தில் அமைப்பதற்காக நபியால் சில மேலான அறிவுறுத்தல்கள் அத்துடன் பதிவு செய்யப்பட்டன.

குலஃபா அர் ராஷிதீன்களில் மூன்றாம வரான உதுமானின் காலம் வரை, ஆரம்பகால முஸ்லிம் கள் குர்ஆனை ஒன்று சேர்க்க, தொகுக்க முற்படவில்லை. இக் கடினமான காரியத்தைச் செய்து முடிக்க ஒரு குழு நியமிக்கப்பட்டது. மேலும் விபரங்களுக்கு ரஷாத் கலீஃபாவின் குர்ஆன் மொழி பெயர்ப்பின் பின் இணைப்பு 24ல் பார்க்கவும்.

---

# குர்ஆன் மட்டும் போதாதா?

## அல்முபீன் இதழின் அடுத்த கேள்வி

அல்முபீன் கேள்வி :

**நிச்சயமாக நாம் உமக்கு இரட்டையானவற்றிலிருந்து ஏழினையும், மகத்தான குர்ஆனை யும் வழங்கியிருக்கின்றோம்.**

**இரட்டை யானவற்றில் ஏழு அல்லது திரும்பத் திரும்ப ஓதப்படும் ஏழு என்றால் என்ன அர்த்தம்? குர்ஆனைத் தனியாகவும் ஏழு என்பதைத் தனியாகவும் அல்லாஹ் கூறுகிறான். எனவே குர்ஆனுக்கு நிகராகக் கூறப்படும் அந்த ஏழு எது?**

**பதில்:**

மறைக்கப்பட்ட சத்தியத்தை வெளிக்கொணர்ந்த அல்லாஹ் வுக்கே எல்லாப் புகழும்! 'இரட்டை யானவற்றில். ஏழு'என்ற இந்த மொழிபெயர்ப்பை நீங்கள் இதுவரை கூறவில்லையே. ஏன்? இரட்டையானவற்றில் ஏழு அல்லது திரும்பத் திரும்ப ஓதப்படும் ஏழு என்று எழுதப்பட்டிருக்கிற. 'ஸப்அம் மினல் மதானி' என்றால் திரும்பத் திரும்ப ஓதப்படும் ஏழு என்ற அர்த்தத்தை எங்கிருந்து பெற்றீர்கள். ஆம்! இந்தத் தவறான மொழிபெயர்ப்பு ஹதீஸ்களின் அடிப்படையில் செய்யப்பட்டதே!

ஆயினும் அதன் சரியான மொழி பெயர்ப்பு இரட்டையான ஏழு, அல்லது '7 ஜோடி' என்பதே. ஹதீஸ்களின் அடிப்படையில் இஸ்லாமிய அறிஞர்கள் 'அல் ஃபாதிஹா' அத்தியாம்தான் 'ஸப்அம் மினல் மதானி' 'இரட்டையான ஏழு' (இதைப் பொருந்தாத விதமாக திரும்பத் திரும்ப ஓதப்படும் ஏழு என்று சிதைத்துள்ளார்கள்) என்று கூறுகின்றனர். மேலும் இங்கே குர்ஆனைத் தனியாகவும் ஸப்அம் மினல் மதானி என்பதைத் தனியாகவும் அறிந்திருக்கின்றனர். அல்ஃபாத்திஹா அத்தியாயம் குர்ஆனின் ஒரு பகுதிதானே! அதைப் பிரித்துக் கூறுவதன் தாத்பர்யம் என்ன, ஏன்? எவ்வாறு அல் பாத்திஹா குர்ஆனிலிருந்து தனித்து நிற்கிறது என்ற கேள்விகட்கெல்லாம் ஹதீஸ்களில் பதில் இல்லை. இப்போது நாம் ஸப் அம் மினல் மதானி (or) ஏழு ஜோடி' என்றால் என்ன என்று இறைவனால் அறிவிக்கப் பட்டிருக்கிறோம. 'ஒவ்வொரு செய்திக்கும் (முன்னறி விப்புக்கும்) ஒரு காலகட்டமுண்டு' என்ற 6:67 வசனப்படி இப்போது நாம் புதிய நினைவூட்டல்கள் அளிக்கப் பட்டுள்ளோம்.

15:87ல் குர்ஆனிலிருந்து தனித்துக் கூறப்படும் 'ஸப்அம் மினல் மதானி' (ஸா) - 'ஏழு ஜோடி' என்பது, குர்ஆனில் அமைக்கப்பட் டுள்ள அற்புதக் கணிதக் கட்டமைப்பின் முக்கிய அங்கமான 'ஹீருஃபுல் முகத்த ஆத்' - 'முத்திரை எழுத்துக்கள்' என்பதையே குறிக் கிறது. ஆம்! அவற்றில் 14 எழுத்துக் கள் (7 ஜோடி) பயன்படுத்தப்பட் டுள்ளன. அவை 1. அலிஃப், 2. (ல)லாம், 3. (ம) மீம் (Q), 4 (ஸ) ஸாத், 5. (ர) ரே, 6.(க) காஃப், 7. (ஹ) ஹா, 8. (ய) யா, 9. (அ) அய்ன் , 10. (தா)த்தா , 11. (ச) சீன், 12. (ஹ) ஹா, 13. (K) (க.) காஃப், 14. (ன) நூன் ஆகிய எழுத்துக்கள். இவை மொத்த அரபி எழுத்துக்களின் பாதி ஆகும்!

அது மட்டுமல்ல, அவை 14 வகைகளாகவும் அமைக்கப்பட் டுள்ளன. அவை 1. அலிஃப் லாம்மீம், 2. அலீஃபலாம் ரா, 3. அலிஃப் லாம் மீம்ரா , 4. அலிஃப் லாம் மீம் ஸாத் , 5. நூன், 6. ஸாத், 7. யாஸீன், 8. ஹாமீம், 9. - அய்ன் ஸீன் காப் 10. ஸாத், 11. காப் ஹா யா அய்ன் ஸாத் 12. தா ஹா, 13. தாஸீன், 14. தாஸின்மீம் ஆகும்.

நம்பிக்கை கொண்டவர்களுடன் இறைவன் தான் தேர்ந்தெடுத்த தூதர்கள் மூலம் தொடர்பு கொள் கிறார். அவ்விதமாக மெய்ப்பிக்கும தூதர் ரஷாத் கலீஃபா அவர்கள் மூலம் 'ஸப்அம் மினல் மதானி 'ஏழு ஜோடி' என்பதன் உண்மையான அர்த்தம் விளக்கம் என்ன என்பதை நாம் இப்போது அறிந்திருக் கின்றோம். இன்னும் இது போல் ஹதீஸ்களின் அடிப்படையில், இன்றைய இஸ்லாமிய அறிஞர்கள் சிதைத்தும், திரித்தும், மாற்றியும் கூறி வரும் வசனங்கள் அனைத்திற்கும் மிகச்சரியான, தெளிவானவிளக்கங்

களை ரஷாத் கலீஃபாவின் ஆங்கில மொழி பெயர்ப்பில் நாம் அறிந்து கொள்கிறோம். (மேலும் இந்த ஸப் அம்மினல் மதானி (15:87) இறுதி நாளுடன் தொடர்புபடுத்திக் கூறப் படுவதன் தாத்பயர்த்தையும் இன்ஷா அல்லா நாம் பின்னர் அறிந்து கொள்ளலாம்.

ஸப்அம் மினல் மதானி - 'ஏழு ஜோடி' என்பது 19ன் அடிப்படையில் அமைக் கப்பட்டுள்ள அற்புதக் கட்டமைப் பின் முக்கிய அங்கமான முத்திரை எழுத்துக்களே! இம் முத்திரை எழுத்துக்களின் தாத்பர் யத்தை இப்போது நாம் அறிந் துள்ளோம். (பார்க்க இறைவனின் முத்திரை 19) அவ்வற்புதம் குர்ஆனின் பொருள் உள்ளடக் கத்தோடு தொடர்பு இல்லாதது. எனவே இறைவன் மகத்தான குர்ஆனையும், ஸப் அம்மினல் மதானி ஏழு ஜோடியையும் தனித்துக் கூறுவதன் தாத்பர்யத்தையும் நாம் எண்ணி எண்ணி வியக்கிறோம்!

இன்ஷா அல்லாஹ்.

(தொடரும்)

---

# ஹதீஸ்களின் உண்மைநிலை

பெரும்பாலான முஸ்லிம்கள் பொதுவாக, ஹதீதுத் தொகுப்புக் களைப் பற்றிப் பேசும் போது அதற்குக் குர் ஆனுக்கு இணையான அல்லது அதற்கும் அதிகமான மரியாதை கொடுத்துப் பேசுவார்கள். நம்பிக்கை கொண்டவர்கள் நேர்வழியையும் சரியான மகிழ்ச்சியையும் எதில் தேட வேண்டு மென்று இறைவன் குர் ஆனில் தெளிவாக அறிவிக்கிறார். ஆனால் இறைவனின் வார்த் தைகளை நம்பாதவர்கள் வழக்கமாக ஹதீஸ் மற்றும் மற்றும் சுன்னாவில் அடைக்கலம் தேடுவர். இது குர்ஆனில் இறைவனால் கண்டிக்கப்பட்ட விஷயமாகும். அவருடைய வேதம் மட்டுமே 'சிறந்த ஹதீஸ்' என்றும் (39:23). அவருடைய 'ஹதீஸ்களை மட்டுமே நாம் நம்ப வேண்டுமென்றும் (7:185), மேலும் எப்படி இந்த மக்கள் தங்கள் இறைவனின் ஹதீஸ்களை (வார்த்தைகளை) நம்பமறுக் கின்றார்கள் என்று வியக்கின்றார் (45:6-7)

இமாம் அல் புகாரி, சுருக்கமாக புகாரி நபியின் கட்டளைகளை அவருக்குப் பின் வந்த நான்கு கலீஃ பாக்களின் வழிகாட்டுதல் களையும் மீறி ஹதீஸ் மற்றும் சுன்னத் ஆகியவற்றைத் தொகுக்க முடிவு செய்த 'அறிஞர்களில் ஒருவராவார். இன்றைய பெரும்பாலான முஸ்லிம்கள் புகாரியை நினைக்கும் போது அவருக்குச்சற்றும் தகுதியில்லாத மரியாதையுடன் நினைக்கிறார்கள். அவருக்கப்பின் வந்த அறிஞர்ளால் அவர் ஒரு (அவ்லியாவின்) 'ஞானி'யின்

நிலைக்கு உயர்த்தப்பட்டார். அவர்கள் புகாரியின் புத்தகங்களை 'இரண்டாவது குர்ஆன்' ஆக ஆக்கி விட்டார்கள்.

இன்றைய கிறித்துவ மதம் எப்படி St. Paul ன் கண்டு பிடிப்பாக உள்ளதோ அதே போல் இன்றைய இஸ்லாம், குர் ஆனைச் சிதைத்து, அதற்குக் கறையை ஏற்படுத்திய அல்புகாரி போன்றவர்களின் கண்டு பிடிப்பே! இவற்றுக்கும் மெய்யான இஸ்லாத்திற்கும் (அடிபணிதல்) எவ்விதச் சம்பந்தமுமில்லை.

புகாரிக்காக வாதாடுபவர்கள் அவர் ஹதீஸ்களைத் தொகுத்த முறையை மிகவும் சிலாகித்துப் பேசுவர். இதன் மூலம் புகாரி தன் ஹதீஸ்களை எங்கிருந்து பெற்றார் என்பதைப் பற்றிய அவர்களின் அறியாமை யைப் பிரதிபலிக் கின்றனர்.

ஒரு ஹதீஸின் உண்மைத் தன்மையைப் பற்றி அறிந்து கொள்ள தான் கடைப்பிடித்ததாகக் கூறும் விதிமுறைகளை பல ஹதீஸ்களில் அவர் மீறி இருக்கிறார். அதோடு மட்டு மல்லாமல், அவருடைய சுய அபிப்பிராயங்களும், அரசியல் தொடர்புகளும், அலீ இப்னு அபீதாலிப் போன்றோர் மீது அவர் கொண்டிருந்த வெறுப்பும், எந்த ஹதீஸ்களைப் பதிவு செய்வது என்ற அவர் தேர்விலே பாதிப்புக்கள் கொண்டதாயிருந்தது. அலீயைப் பற்றிய ஹதீஸ்களின் உள்ளடக் கத்தைப் பற்றிச் சிறிதும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. குர் ஆனுக்கு முரணான, மற்ற ஹதீஸ் களுக்கு முரணான, அறிவுக்கு முரணமான, பல ஹதீஸ்களை அவரின் பட்டியலில் நாம் காண்கிறோம்.மேலும் இறைவனை, முஹம்மத் நபியை, அவரின் குடும்பத்தாரை இழிவு செய்யும் விதமான ஹதீஸ்களையும் அவர் பதிவு செய்திருக்கிறார்.

அலீ மற்றும் முஆவியா ஆகிய இருவருக்கிடையிலான பிரச் சினையில் புகாரியின் நிலை அரசியல் ரீதியாக அவர் சோரம் போயிருந்ததைக் காட்டுகிறது. அலீயைத் தாழ்த்திக் கூறும் ஹதீஸ்களையும் அலீயின் விரோதி யான முஆவியாவை ஒரு சிறந்த மனிதரைப் போன்று காட்டும் ஹதீஸ்களையும் அவர் பதிவு செய்தார். ஆனால் முஆவியாவோ சாதாரண இஸ்லாமியச் சட்டங் களைக் கூடச்சிதைப் பதிலும், மீறுவதிலும் பெயர் போனவர்.

பொய்யர்களிடமிருந்தும், ஊழல் பேர்வழிகளிடமிருந்தும், நம்பிக்கை மோசம் செய்தவர்களிடமிருந்தும் ஹதீஸ்களை புகாரி - பதிவு செய்திருக்கின்றார். அவற்றை மக்கள் 'ஸஹீஹ்' (உண்மையானது, சரியான தொடர்புள்ளது) என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கப் பின் வந்த இஸ்லாமிய அறிஞர்கள் புகாரியின் கோளாறுகளையும், குறைபாடு களையும் வெளிப்படுத்த அஞ்சினர்.

ஒரு சிறு உதாரணத்திற்கு : 'அல் முஸ்தத்ரக்' என்ற பிரபலமான ஹதீதுக் கலை பற்றிய புத்தகத்தில் அதன் ஆசிரியர் கூறுகிறார். இமாம் முஸ்லிமால், அவரின் புத்தகமான 'ஸஹீஹ் முஸ்லிமுக்கு' ஹதீஸ்களை அறிவிக்கும் தகுதியில்லை, நம்பத்த குதியற்றவர்கள் என்று நிராகரிக்கப்பட்ட 434 பேரின்

**(தொடர்ச்சி 27ம் பக்கம் பார்க்க)**

وَاِذْ قُلْتُمْ يٰمُوْسٰى لَنْ نَّصْبِرَ عَلٰى طَعَامٍ وَّاحِدٍ فَادْعُ لَنَا
رَبَّكَ يُخْرِجْ لَنَا مِمَّا تُنْبِتُ الْاَرْضُ مِنْ بَقْلِهَا وَقِثَّآئِهَا
وَفُوْمِهَا وَعَدَسِهَا وَ بَصَلِهَا قَالَ اَتَسْتَبْدِلُوْنَ الَّذِىْ هُوَ
اَدْنٰى بِالَّذِىْ هُوَ خَيْرٌ اِهْبِطُوْا مِصْرًا فَاِنَّ لَكُمْ مَّا سَاَلْتُمْ
وَضُرِبَتْ عَلَيْهِمُ الذِّلَّةُ وَالْمَسْكَنَةُ وَبَآءُوْ بِغَضَبٍ مِّنَ اللّٰهِ
ذٰلِكَ بِاَنَّهُمْ كَانُوْا يَكْفُرُوْنَ بِاٰيٰتِ اللّٰهِ وَيَقْتُلُوْنَ النَّبِيّٖنَ
بِغَيْرِ الْحَقِّ ذٰلِكَ بِمَا عَصَوْا وَّكَانُوْا يَعْتَدُوْنَ

## *Israel Rebels*

61. Recall that you said, "O Moses, we can no longer tolerate one kind of food. Call upon your Lord to produce for us such earthly crops as beans, cucumbers, garlic, lentils, and onions. " He said, "Do you wish to substitute that which is inferior for that which is good? Go down to Egypt, where you can find what you asked for. " They have incurred condemnation, humiliation, and disgrace, and brought upon themselves wrath from God. This is because they rejected God's revelations, and killed the prophets unjustly. This is because they disobeyed and transgressed.

## இஸ்ரேல் கலகம் செய்கிறது

61. நீங்கள் கூறியதை நினைவு கூர்ந்திடுங்கள், மோஸஸே, இதற்கு மேலும் ஒரே வகையான உணவைச் சகித்துக் கொள்ள எங்களால் இயலாது. அவரைக்காய், வெள்ளரிக்காய், பூண்டு, தட்டைப்பயறு, மற்றும் வெங்காயம் போன்ற பூமியின் பயிர்களை எங்களுக்காக முளைப்பிக்குமாறு உம்முடைய இரட்சகரை அழைப்பீராக. அவர் கூறினார், நல்லதாக இருப்பவற்றுக்குத் தாழ்ந்ததாக இருப்பவற்றை மாற்றிக் கொள்ள நீங்கள் விரும்புகின்றீர்களா? நீங்கள் கேட்டுக் கொண்டவற்றைக் காணக் கூடிய எகிப்திற்கு இறங்கிச் செல்லுங்கள். அவர்கள் கண்டனம், இழிவு, மற்றும் அவமானத்திற்கு உள்ளாகி விட்டார்கள், மேலும் கடவுள்-யிடமிருந்து கடுங்கோபத்தைத் தங்கள் மீதே வரவழைத்துக் கொண்டார்கள். இதன் காரணமாவது அவர்கள் கடவுள்-ன் வெளிப் பாடுகளை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள், மேலும் நபிமார்களை அநியாயமாகக் கொலை செய்தார்கள். இதன் காரணமாவது அவர்கள் கீழப்படியாதிருந்தார்கள், மேலும் வரம்பு மீறினார்கள்.

إِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَالَّذِيْنَ هَادُوْا وَالنَّصٰرٰى
وَ الصّٰبِـِٕيْنَ مَنْ اٰمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ
وَعَمِلَ صَالِحًـا فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ
وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

**Unity of All Submitters**

62. Surely, those who believe, those who are Jewish, the Christians, and the converts; anyone who
(1) believes in God, and
(2) believes in the Last Day, and
(3) leads a righteous life, will receive their recompense from their Lord. They have nothing to fear, nor will they grieve.

**எல்லா அடிபணிந்தோர்களின் ஒற்றுமை**

62. நிச்சயமாக, நம்பிக்கை கொண்டவர்கள், யூதர்களாக இருப்பவர்கள், கிறிஸ்துவர்கள், மேலும் மதம் மாறியவர்கள்; எவராயினும்
(1) கடவுள் மீது நம்பிக்கை கொண்டு, மேலும்
(2) இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொண்டு, மேலும்
(3) நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்றவர்கள், தங்களுடைய இரட்சகரிடமிருந்து தங்களுடைய பிரதிபலனைப் பெற்றுக்கொள்வார்கள். அவர்கள் அஞ்சுவதற்கு எதுவுமில்லை, அன்றி அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

وَاِذْ اَخَذْنَا مِيْثَاقَكُمْ وَرَفَعْنَا فَوْقَكُمُ الطُّوْرَ
خُذُوْا مَآ اٰتَيْنٰكُمْ بِقُوَّةٍ وَّ اذْكُرُوْا مَا فِيْهِ
لَعَلَّكُمْ تَتَّقُوْنَ

**Covenant with Israel**

63. We made a covenant with you, as we raised Mount Sinai above you: "You shall uphold what we have given you strongly, and remember its contents, that you may be saved."

**இஸ்ரேலுடன் உடன்படிக்கை**

63. ஸினாய் மலையை உங்களுக்கு மேலே நாம் உயர்த்தியவாறாக, உங்களுடன் நாம் ஓர் உடன் படிக்கை செய்தோம்: உங்களுக்கு நாம் கொடுத்தவற்றை நீங்கள் பலமாக ஆதரிக்கவும், மேலும் அதில் உள்ள வற்றை நினைவில் கொள்ளவும் வேண்டும், நீங்கள் காப்பாற்றப்படும் பொருட்டு.

ثُمَّ تَوَلَّيْتُمْ مِّنْ بَعْدِ ذٰلِكَ فَلَوْلَا فَضْلُ اللّٰهِ
عَلَيْكُمْ وَرَحْمَتُهٗ لَكُنْتُمْ مِّنَ الْخٰسِرِيْنَ

64. But you turned away thereafter, and if it were not for God's grace towards you and His mercy, you would have been doomed.

64. ஆனால் அதன் பின்னரும் நீங்கள் திரும்பிச் சென்றுவிட்டீர்கள், மேலும் உங்கள்பால் கடவுள்-ன் அருளும் அவருடைய கருணையும் மட்டும் இல்லாதிருந்தால், நீங்கள் தண்டிக்கப்பட்டவர்களாக இருந்திருப்பீர்கள்.

وَلَقَدْ عَلِمْتُمُ الَّذِيْنَ اعْتَدَوْا مِنْكُمْ فِىْ
السَّبْتِ فَقُلْنَا لَهُمْ كُوْنُوْا قِرَدَةً خَاسِئِيْنَ

65. You have known about those among you who desecrated the Sabbath. We said to them, "Be you as despicable as apes."

65. உங்களில் ஸப்பாத்தை அவமரியாதை செய்தவர்களைப் பற்றி நீங்கள் அறிந்தே இருக்கின்றீர்கள். நாம் அவர்களிடம் கூறினோம், குரங்குகளைப் போல் இழிவடைந்தவர்களாக நீங்கள் ஆகிவிடுங்கள்.

فَجَعَلْنٰهَا نَكَالاً لِّمَا بَيْنَ يَدَيْهَا وَمَا خَلْفَهَا
وَمَوْعِظَةً لِّلْمُتَّقِيْنَ

66. We set them up as an example for their generation, as well as subsequent generations, and an enlightenment for the righteous.

66. அவர்களுடைய தலைமுறைக்கும், அவ்வண்ணமே பின் தொடர்கின்ற தலைமுறைகளுக்கும், ஓர் உதாரணமாக, மேலும் நன்னெறியாளர்களுக்கு ஓர் அறிவூட்டலாக அவர்களை நாம் அமைத்தோம்.

**The Heifer***

**பசுங்கன்று***

وَاِذْ قَالَ مُوْسٰى لِقَوْمِهٖۤ اِنَّ اللهَ يَاْمُرُكُمْ اَنْ
تَذْبَحُوْا بَقَرَةً ؕ قَالُوْۤا اَتَتَّخِذُنَا هُزُوًا ؕ
قَالَ اَعُوْذُ بِاللّٰهِ اَنْ اَكُوْنَ مِنَ الْجٰهِلِيْنَ

67. Moses said to his people, "God commands you to sacrifice a heifer." They said, "Are you mocking us?" He said, "God forbid, that I should behave like the ignorant ones.

67. மோஸஸ் தன் சமூகத்தாரிடம் கூறினார், ஒரு பசுங்கன்றைப் பலியிடுமாறு கடவுள் உங்களுக்குக் கட்டளையிடுகின்றார்.அவர்கள் கூறினர், நீர் எங்களைக் கேலி செய்கின்றீரா? அவர் கூறினார், அறியாமை நிறைந்தவர்களில் ஒருவனைப் போல் நான் நடந்து கொள்வதை விட்டும், கடவுள் காப்பாராக.

قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ يُبَيِّنْ لَّنَا مَا هِىَ ؕ قَالَ
اِنَّهٗ يَقُوْلُ اِنَّهَا بَقَرَةٌ لَّا فَارِضٌ وَّلَا بِكْرٌ ؕ
عَوَانٌ بَيْنَ ذٰلِكَ ؕ فَافْعَلُوْا مَا تُؤْمَرُوْنَ

68. They said, "Call upon your Lord to show us which one." He said, "He says that she is a heifer that is neither too old, nor too young; of an intermediate age. Now, carry out what you are commanded to do."

68. அவர்கள் கூறினர், எந்த ஒன்று என்று எங்களுக்குக் காட்டுமாறு உம்முடைய இரட்சகரை அழைப்பீராக. அவர் கூறினார், மிகவும் கிழடு அல்லாத அன்றி மிகவும் இளையதும் அல்லாததொரு பசுங்கன்று என்று அவர் கூறுகின்றார்; இடைப்பட்டதொரு வயது கொண்டது. இப்பொழுது, செய்யுமாறு உங்களுக்குக் கட்டளையிடப் பட்டதைச் செயல்படுத்துங்கள்.

قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ يُبَيِّنْ لَّنَا مَا لَوْنُهَا قَالَ اِنَّهٗ يَقُوْلُ اِنَّهَا بَقَرَةٌ صَفْرَآءُ فَاقِعٌ لَّوْنُهَا تَسُرُّ النّٰظِرِيْنَ

69. They said, "Call upon your Lord to show us her color." He said, "He says that she is a yellow heifer, bright colored, pleases the beholders."

69. அவர்கள் கூறினர், அதனுடைய நிறத்தை எங்களுக்குக் காட்டுமாறு உம்முடைய இரட்சகரை அழைப்பீராக. அவர் கூறினார், அது ஒரு மஞ்சள் நிறமுள்ள பசுங்கன்று, பிரகாசமான நிறம் கொண்டது, பார்ப்பவர்களை மகிழ்விப்பது என்று அவர் கூறுகின்றார்.

قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ يُبَيِّنْ لَّنَا مَا هِىَ اِنَّ الْبَقَرَ تَشٰبَهَ عَلَيْنَا وَاِنَّـآ اِنْ شَآءَ اللّٰهُ لَمُهْتَدُوْنَ

70. They said, "Call upon your Lord to show us which one. The heifers look alike to us and, God willing, we will be guided."

70. அவர்கள் கூறினர், எந்த ஒன்று என்று எங்களுக்குக் காட்டுமாறு உம்முடைய இரட்சகரை அழைப்பீராக. பசுங்கன்றுகள் ஒரே மாதிரியாகவே எங்களுக்குத் தோன்றுகின்றன, மேலும் கடவுள் நாடினால், நாங்கள் வழிநடத்தப்பட்டவர்களாக இருப்போம்.

قَالَ اِنَّهٗ يَقُوْلُ اِنَّهَا بَقَرَةٌ لَّا ذَلُوْلٌ تُثِيْرُ الْاَرْضَ وَلَا تَسْقِى الْحَرْثَ مُسَلَّمَةٌ لَّا شِيَةَ فِيْهَا قَالُوا الْـٰٔنَ جِئْتَ بِالْحَقِّ فَذَبَحُوْهَا وَمَا كَادُوْا يَفْعَلُوْنَ

71. He said, "He says that she is a heifer that was never humiliated in plowing the land or watering the crops; free from any blemish." They said, "Now you have brought the truth." They finally sacrificed her, after this lengthy reluctance.

71. அவர் கூறினார், நிலத்தை உழுததனாலோ அல்லது பயிர்களுக்கு நீரிறைத்தோ ஒருபோதும், இழிவுபடுத் தப்படாததொரு பசுங்கன்று அது; களங்கம் எதுவும் இல்லாதது, என்று அவர் கூறுகின்றார். அவர்கள் கூறினர், இப்போது நீர் உண்மையைக் கொண்டு வந்துள்ளீர். இந்நீண்ட தயக்கத்திற்குப் பின்னர், இறுதியில் அவர்கள் அதனைப் பலியிட்டனர்.

**Notes**

2.67 Although this sura contains important laws and : commandments, including the contact: prayers, fasting, Hajj pilgrimage, and the laws of marriage, divorce, etc., the name given to the sura is "The Heifer." This reflects the crucial importance of submission to God and immediate, unwavering obedience to our Creator, Such submission proves our belief in God's omnipotence and absolute authority. See also the Bible's Book of Numbers, Chapter 19.

குறிப்பு:

2:67 இந்த அத்தியாயத்தில் முக்கிய சட்டங்களும், கட்டளைகளுமான தொழுகை, நோன்பு, ஹஜ் ஆகியவற்றைப் பற்றியும், திருமணம், விவாகரத்து பற்றிய சட்டங்களும் இடம் பெற்றிருந்தாலும் இவ்வத்தியாயத்திற்கு வைக்கப்பட்டுள்ள பெயர் 'பசுங்கன்று' என்பதே. இது நாம் இறைவனுக்கு அடிபணிவதன் முக்கியத்துவத்தையும், தயக்கமில்லாத, உடனடியான கீழ்ப்படிகையின் முக்கியத்துவத்தையும் பிரதிபலிக்கிறது. இத்தகைய அடிபணிதலே இறைவனின் ஏக அதிகாரத்திலும், வல்லமையிலும் நமக்கு உள்ள நம்பிக்கையை நிரூபிக்கிறது.

(22ம் பக்கத் தொடர்ச்சி)

ஹதீஸ்களை இமாம் புகாரி பதிவு செய்திருக்கிறார். அதே நேரத்தில் புகாரியால் நிராகரிக்கப்பட்ட 625 பேர்களிடமிருந்து ஹதீஸ்களை இமாம் முஸ்லிம் பதிவு செய்திருக்கிறார். இவைதான் 'ஸஹீஹைன்' (உண்மையான இரண்டு) என்று இவர்களால் புகழப்படுகிறது!

பொதுவாக பெரும்பாலான முஸ்லிம்கள் சஹாபாக்களைப் (நபித் தோழர்கள்) பற்றிப் பேசும் போது அவர்கள் ஏதோ வேறு ஒரு இனத்தைச் சார்ந்தவர்கள் போன்றும், தனித்தன்மை வாய்ந்த படைப்புக் களைப் போன்றும் பேசுவர். அவர்களைத் தவறே செய்யமுடியாத, குற்றமற்ற வர்களாகக் கருதுவர். அவர்கள் நபிக்குச் செலுத்த வேண்டிய அன்பையும் மரியாதையையும் சஹாபாக்களுக்குச் செலுத்துவர். இறைவன் மேல் வைக்க வேண்டிய அன்பையும், கண்ணியத் தையும் நபியின் மேல் வைப்பர். முஸ்லிம்களில் பெரும்பாலோர் சஹாபாக்கள் என்ன செய்ததாகக் கூறப்பட்டாலும் அவற்றை நியாயப்படுத்தவும் முனைவர். ஆனால் அவர்களுக்கு ஸஹாபா என்ற வார்த்தையின் அர்த்தமோ, அதை எப்படிப் பிரயோகிக்க வேண்டும் என்பதோ, எப்படிப் பிரயோகப் படுத்தப்படுகிறது என்பதோ தெரியாது.

இஸ்லாமிய சரித்திரத்தைப் படிக்கும் மாணவர்களுக்கு 'ஸஹாபா' என்ற வார்த்தைக்குக் கொடுக்கப்படும்பற்பல விளக்கங் கள் அதிர்ச்சியையேதரும். அவ் விளக்கங்களை அறிந்துகொள் வது, இஸ்லாமிய சரித்திரத்தையும், நம் மார்க்கத்தையும் நமது புத்தகங்க ளையும் பற்றிய ஒரு முடிவுக்கு நாம் வர உதவும்.

வழக்கம் போலவே 'ஸஹாபா' என்றால் யார் என்பதிலும் இஸ்லா மிய அறிஞர்களுக்கு இடையில் ஒரு ஒத்த கருத்து இல்லை .

1. அல்புகாரியின் விளக்கம்: புகாரியின் விளக்கப்படி நபியுடன் கூட இருந்த அனைவரும், அல்லது நபியைப் பார்த்திருந்தாலும் போதும் அவர்கள் அனைவரும் ஸஹாபாக்களே. தனக்கென ஒரு தனி ஹதீஸ் தொகுப்பைச் செய்த அஹ்மத் இப்னு ஹன்பல் இவ்விளக்கத்தை ஏற்றுக் கொள்வதோடு அல்லாமல் மேலும் தெளிவு படுத்து கிறார், 'ஸஹாபி என்றால் நபியுடன் ஒரு வருடமோ, ஒரு மாதமோ, ஒரு நாளோ அல்லது ஒரு நாழிகையோ இருந்தவர், அல்லது நபியைப் பார்த்திருந்தால் அவரும் ஸஹாபியே"

2. அப்துல்லாஹிப்னு உமர் இப்னுல் கத்தாபின் விளக்கம்: ஒருவர் பிராயமடைந்த பின்னர் நபியைப் பார்த்திருந்து, அவர் அறியப்பட்ட முஸ்லிமாகவும் மார்க்கத்தைச் சரியாகப் புரிந்து கொண்டவராகவும், இருந்தால் அவர் (நபித்தோழர்) ஸஹாபி ஆவார். இவ்விளக்கத்தின்படி வயதுக்கு வராதவர்கள் நபியைப் பார்த்திருந்தாலும் அவர் ஸஹாபி இல்லை .

3. அல்தாபிஈ ஸயீத் இப்னு அல் முஸீபின் விளக்கத்தின்படி: முஹம்மத் நபியின் தோழமையில் ஒன்று அல்லது இரண்டு வருடங்கள் இருந்து, ஒன்று அல்லது இரண்டு போர்களில் கலந்து கொண்டவரே

'ஸஹாபி' இவ்விளக்கம்தான் இமாம் அல்கஸ்ஸாலி அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஊக்குவிக்கப் பட்டது.

மேற்குறிப்பிட்ட மூன்று விளக்கங்களையும் படிப்பவர்கள் புகாரி எந்த அளவுக்குத் தரம் தாழ்ந்தவராக இருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளலாம். ஒரு பிரமுகரைப் பார்த்தவர்கள் எல்லாரும் அவருடைய தோழர்களே என்று கூறுவது அறிவுடைமை ஆகுமா? இத்தகைய அளவுகோலின் படிதான் புகாரி தன் ஹதீஸ்களைத் தொகுத்தார் என்றால் அவருடைய ஹதீஸ்களில் உள்ள கோளாறுகளுக் கான காரணத்தை நாம் இங்கே அறிந்து கொள்கிறோம். அவருடைய அளவுகோலை நாம் மேலும் அளந்து பார்ப்போம்.

( i ) நபியைக் கண்டவர்கள் அனைவரும் நபித் தோழர்களே என்ற புகாரியின் அளவு கோலுக்கு குர் ஆனிலோ, நபி கூறியதாகவோ, ஆரம்ப கால முஸ்லிம்கள் கூறியதாகவோ எந்த ஆதாரமும் இல்லை .

குர்ஆன் முழுவதும், நபிவாழ்ந்த மதினா நகரைச் சூழ இருந்த 'நயவஞ்சகர்களைப் பற்றிய சம்பவங்கள் ஏராளமாக இடம் பெற்றுள்ளன. அவர்கள் அவைரும் நபியைக் கண்டிருக்கிறார்கள், நபியின் உரைகளைக் கேட்டிருக் கிறார்கள். ஆயினும் புகாரி கருதுவது போல் எல்லாரையும் நபித் தோழர் களாக நாம் கருதிவிட குர் ஆன் இடம் தரவில்லை .

"உங்களைச் சூழ உள்ள அரபிகளில் நயவஞ்சகர்கள் உளளார்கள் மேலும் மதினாவில் வாழ்பவர்களில் நயவஞ்சகத்திற்குப் 5 பழகி விட்டவர்களும் உள்ளனர் ' ' (9:101) மேலும் பார்க்க 10:15.

நபியைக் கண்டவர்களில் நல்லவர் யார், நயவஞ்சகர் யார் என்பதை புகாரி எப்படி அடையாளம் கண்டார்? நாம் எப்படி அடையாளம் காண்பது? புகாரியின் விளக்கப்படி நபியைக் கண்ணால் கண்ட நயவஞ்சகர்களும், தீயவர்களும் கூட ஸஹாபாக்கள்!

(ii) மேலும் நபியின் காலத்தில் தங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்று அறியாத வயதில் இருந்து நபியைப் பார்த்தவர்களையும் ஸஹாபி என்று கருதி அவர்களிடமிருந்து பெற்ற செய்தி களையும் புகாரி ஹதீஸ்களாகப் பதிவு செய்திருக்கிறார்.

புகாரி, நபியின் காலத்தில் சிறுவராக இருந்த அப்துல்லா இப்னு அப்பாஸிடமிருந்து ஏராளமான ஹதீஸ்களை அறிவிக்கிறார். இவர் அதற்கு முன்னர் ஒருபோதும் ஸஹாபி என்று கருதப் பட்டதில்லை. ஆனால் புகாரிதான் இவரை ஸஹாபி என்று முதலில் கருதினார். புகாரியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹதீஸ்களை அறிவித்த மற்ற நபி காலச் சிறுவர்கள் அல்நுஃமான் இப்னு பஷீர் (8 வயது) மஹ் மூது இப்னு அல்ராபி (5 வயது) அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (9 வயது) ஹுசைன் இப்னு அலீ (7 வயது) ஹஸன் பின் அலீ (8 வயது) உமர் இப்னு அபீ முஸ்லிமா (9 வயது). இவர்கள் அனைவரின் பெயரிலும் புகாரி ஹதீஸ்களைப் பதிவு செய்துள்ளார்.

புகாரி அரசியல் ரீதியாக

அப்பாஸியக் கலீஃபாக்களுடன் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டவர். இவர்கள் நபித்தோழர் அலீக்கு எதிராக அரசியல் புரிந்தனர். புகாரியின் இந்த நிலை அவர் ஹதீஸ்களைத் தேர்வு செய்வதிலும் ஒரு முக்கிய பங்கு வகித்தது. அலீயைப் புகழ்ந்து கூறப்பட்ட அதிகமான செய்திகளை புகாரி ஒதுக்கி விட்டார். உண்மை யான ஸஹாபீயான அலீக்கு எதிரான புகாரியின் நிலை அவரது வழி கேட்டையும் குறை பாட்டையுமே காட்டுகிறது.

**எத்தனை ஹதீஸ்கள்?**

மொத்தம் எத்தனை ஹதீஸ்கள் உள்ளன. அவற்றில் ஸஹீ ஹானவை எத்தனை என்ற கேள்வியை நாம் 'இஸ்லாமிய அறிஞர்களிடம்' கேட்டால் அவர்களின் பதில் மூலம் ஹதீஸ் களைப் பற்றி நாம் அறிந்து கொள்ள முடியும்.

கிட்டத்தட்ட ஏழு லட்சம் ஹதீஸ்கள் முஹம்மத் நபியின் மேல் இட்டுக்கட்டப்பட்டுள்ளன.
இவற்றில் 99% அவர்களின் வாக்குமூலப்படி முழுப்பொய்யும் இட்டுக்கட்டப் பட்டவையும் ஆகும். இவை ஆரம்பகால முஸ்லிம்களால் நிராகரிக்கப்பட்டன. புகழ்பெற்ற ஹதீஸ் தொகுப்பாளர்கள் எத்தனை ஹதீஸ்களைச் சேகரித்தார்கள் என்று பார்ப்போம்.

1. மாலிக் இப்னு அனஸ் தன் முஅத்தா என்ற நூலில் 500 ஹதீஸ் களைப் பதிவு செய்தார்.

2. அஹ்மத் இப்னு ஹன்பல் 40,000 ஹதீஸ்களை அவரது புகழ்பெற்ற நூலான முஸ்னத் அஹ்மதில்பதிவுசெய்துள்ளார்.இந்த 40,000 ஹதீஸ்களை அவர் ஏழு லட்சம் ஹதீஸ்களிலிருந்து தேர்ந் தெடுத்தார். அதாவது 6,60,000 ஹதீஸ்கள் பொய்யானவை ஆதாரமில்லாதவை. அதாவது 94% பொய்கள்.

3. இமாம் அல் புகாரி ஆறு லட்சம் ஹதீஸ்களைச் சேகரித்தார். அவற்றில் 7,275 மட்டுமே உண்மை என்று அவர் கருதினார், கூறினார். அதாவது 5,92,725 ஹதீஸ்கள் பொய்யென்று நிராகரிக்கப்பட்டது. அதாவது 99%.

4. இமாம் முஸ்லிம் மூன்று லட்சம் ஹதீஸ்களைச் சேகரித்து அவற்றில் 4,000 மட்டுமே தேர்வு செய்தார். அதாவது 2,96,000 ஹதீஸ்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன . அதாவது 99%.

இது, பின்வாசல் வழியாக இஸ்லாத்திற்குள் நுழைந்த ஹதீஸ் கள் எந்த அளவு பொய்கள் நிறைந்தது என்றும் நபியின் பேரால் எந்த அளவுக்குப் பொய்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன என்றும் காட்டுகிறது.

இப்போது இறைவன் ஏன் தன் வேதத்தை, சரியான, அழகான ஹதீஸை, தானே, பாதுகாப்பதாகக் கூறினார் என்பதற்கு நமக்கு மற்றுமொரு விடை கிடைக்கிறது. இத்தகையவர்கள் (பொய்யர்கள்) தான் குர்ஆனை நமக்காகத் தந்தார்கள். எனவே அவர்கள் கூறிய மற்ற செய்திகளையும் நாம் நம்ப வேண்டும் என்ற வாதமும் முறியடிக்கப் படுகிறது.

'நாமே இந்நினைவூட்டலை இறக்கினோம். நாமே அதைப் பாதுகாப்போம். 15:19

# அர்த்தம் - அனர்த்தம்

இன்று உலகில் உள்ள எல்லா மதங்களும் வெவ்வேறு பாரம்பர்யங் களின் நடைமுறைத்தொகுப் புக்களே. அவை அனைத்தும் மனிதர்களின் அகந்தையினாலும், அவர்களால் கண் டு பிடிக்கப் பட் ட அனாசாரங்களாலும் பல்வேறு அளவுகளில் பாழ்படுத்தப் பட்டவையாக உள்ளன. மேலும் இவை சில மனிதர்களின் அரசியல், பொருளாதார காரணங்களுக் காகவே ஏற்படுத்தப்பட்டன. ஆயினும் அனைத்து இறைத் தூதர்களும் கொண்டு வந்த ஒரே செய்தி "ஒரே ஒருவர் மட்டுமே கடவுள், நீங்களும் அவரை மட்டுமே வணங்க வேண்டும்" என்பதே .

ஒவ்வொரு தூதருக்குப் பிறகும் அவர்கள் கொண்டு வந்த முக்கிய செய்தி படிப்படியாகச் சிதைக்கப்பட்டு, முரட்டுத்தனமான சிக்கலான மதக்கொள்கைகளின் கீழே புதைக்கப்பட்டது.

எல்லா மதங்களும், அனாசாரங்க ளாலும், பாரம்பர்யச் செய்திகளா லும், பொய்யான இணைவைப்புக் கொள்கைகளாலும், சிதைக்கப் பட்டிருந்தாலும், எல்லா மதங்களிலும் சத்தியத்தை, உண்மையான இறைச் செய்தியை மட்டுமே பின்பற்றுவோரும் உள்ளனர். இவர்கள் அனைவரும் இறைவனின் ஏகோபித்த அதிகாரத்தை மட்டும் ஏற்றுக் கொண்டவர்களாகவும், கலப்பின்றி ஒரே இறைவனை மட்டுமே வணங்குவதில் தங்கள் வாழ்வை அர்ப்பணித் தவர்களாகவும் இருப்பார்கள். குர்ஆன் இத்தகை யோரைத்தான் 'முஸ்லிம்கள்' (அடிபணிந்தோர்) என்று குறிப்பிடுகிறது. இவ்விதம் இறைவனுக்கு மட்டுமே அடி பணிந்தவர்கள் கிறித்துவராகவோ யூதராகவோ முஸ்லிமாகவோ, ஹிந்துவாகவோ, புத்த மதத்தைச் சேர்ந்தவராகவோ அல்லது வேறு எந்த மதம் சார்ந்தவராகவும் இருக்கலாம். இவ்விதம் அடிபணிந்தோர் அனைவரும் ஒன்று சேர்ந்து இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே மார்க்கமான 'இஸ்லாத்தில்' (அடிபணிதலில்) இருக்கிறார்கள் (3:19,85)

மதங்கள் சிதைக்கப்பட்டிருப் பதை அடையாளம் கண்டு கொண்டு மதங்களின் அடிப்படைக்குத் திரும்புபவர்கள் சமுதாயத்தை விட்டு விலகியவர்களாகக் கருதப்படுகின் றனர். அவர்கள் சமூக, பொருளாதார நிர்பந்தங்களுக்கும் அடக்கு முறைக்கும் துன்பத்திற்கும் ஆளாகின்றனர். தற்போதுள்ள

மதங்களின் நிலையைப் பிழைப் பாகக் கொண்டிருப்பவர்கள் மதங்கள் தூய்மைப்படுத்தப்பட்டு விட்டால் தங்கள் அந்தஸ்துக்கும், செல்வத்திற் கும் பங்கம் வந்து விடும் என்பதை நன்கறிந்தவர்களாகவே உள்ளனர்.

இறைவன் தான் தேர்ந்தெடுத்த தூதர்களின் மொழியிலேயே வேத வெளிப்பாடுகளை அருள் செய்கிறார். இது ஏனெனில் தூதர்கள் தங்களைச் சூழ உள்ளவர்களுக்குச் செய்தியை எடுத்துரைக்கவும், விளக்கிச் சொல்லவும் வேண்டும் என்பதால் தான். (14:4) உதாரண மாக தவ்ராத் (Torah) எபிரேய (Hebrew) மொழியில் அருளப்பட்டது. குர்ஆன் அரபி மொழியில் அருளப்பட்டது. ஆனால் இறைவனின் இறுதி வேதம் உலக மக்கள் அனைவருக்கும் பொது வானது என்ற நிலையில் மற்ற மொழிகளைப் பேசுபவர்கள் எப்படி வேதச் செய்தியை அறிந்து கொள்வார்கள்? அவர்கள் இறைச் செய்தியை அடைய, அறிந்து கொள்ள முடியாது என்றால் அது நியாயமாகுமா? இறைச் செய்தியை அனைவரும் அறிந்து அதனை நம்பிக்கை கொள்வதற்கு ஏதுவாக வேதம் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று குர்ஆனின் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம். (26:198-199)

மதங்களின் உண்மையான செய்தியை அறிந்து கொள்ள வேதம் சரியானபடி மொழிபெயர்க்கப்பட வேண்டுவது இன்றியமையாத தாகும். துரதிருஷ்டவசமாக, ஒரு மொழிபெயர்ப்பைச் செய்யும் போது அதில் தன் சுயகருத்துக்களையும் புகுத்துவது மனித இயல்பாக உள்ளது.

இதுவே மொழிபெயர்ப்புக்களின் மிகப்பெரிய கோளாறாக உள்ளது. ஆனால் ஒரு வேதத்தை மொழிபெயர்க்கும் போது இத்தகைய தவறுகள் நேர்ந்தால் அது மதங்களின் அடிப்படையையே பாதிக்கக் கூடியதாக அமைகிறது. இவ்விஷயம் லீஸா ஸ்ப்ரே என்ற சகோதரி எழுதிய Jesus - Myth & Message புத்தகத்தில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

குர்ஆன் 1400 வருடங்கட்கு முன்பு அருளப்பட்டது. அதன்பின் பல்வேறு மொழிகளிலும் குர் ஆன் மொழிபெயர்ப்புக்கள் உள்ளன. **ஆனால் இவற்றை மொழிபெயர்த் தவர்களில் ஒருவர் கூட அரபியைத் தாய்மொழி யாகக் கொண்டவர்கள் இல்லை என்பது வியப்புக்குரிய ஒன்றாகும்.** இது ஏனெனில் குர்ஆனை அரபியில் மட்டுமே புரிந்து கொள்ள முடியும் என்பதில் அவர்கள் உறுதியாக உள்ளனர். எனவே அரபியைத் தாய் மொழியாகக் கொள்ளாத முஸ்லிம்கள் அரபியைக் கற்றுக் கொள்ள வேண்டியதன் தேவை ஏற்பட்டது.

குர்ஆனைப் புரிந்து கொள்ள மொழி ஒரு - தடையில்லை . நம்பிக்கைதான் முக்கியம் என்ற (56:79, 41:44) வசனங்களை அவர்கள் பொருட்படுத்தாதது மட்டுமல்ல ஏராளமான அரபியர்கள் குர்ஆனை நம்பவில்லை என்ற

உண்மையையும் அவர்கள் மறந்து விட்டனர். ஆச்சர்யகரமாக, அரபியைக் கற்றுக் கொள்ளும் ஏரளமானோர் குர் ஆனைப் புரிந்து கொள்ளும் அளவுக்குக் கற்றுக் கொள்வதில்லை. அதை விட மோசமாக,ஏராளமான முஸ்லிம்கள், ஒரு வார்த்தையைக் கூடப் புரிந்து கொள்ளாமல் குர் ஆனை அரபியில் ஓதி, தங்கள் நேரத்தை வீணடிக்கிறார்கள். இவ்விதம், இன்றைய பெரும்பான்மையான முஸ்லிம்களை குர்ஆனைப் புரிந்து கொள் வதிலிருந்தும் ஆராய்வதிலிருந்தும் சைத்தான் தடுத்து விட்டான்.

இறைவனால் வழங்கப்பட்ட எல்லா மதங்களும் சிதைக்கப்பட்டும், பாழ்படுத்தப்பட்டும் விட்டதால், எல்லா நபிமார்களும், தூதர்களும் கொண்டு வந்த இறைச் செய்திகளைத் தூய்மைப்படுத்தவும், ஒன்று சேர்க்கவும், அவை அனைதையும் 'இஸ்லாம்' (அடிபணிதல்) என்ற பெயரில் ஒன்று படுத்தவும் இறைவன் மெய்ப்பிக்கும் தூதரை அனுப்பி உள்ளார். இவ்விஷயம், 3:81ல் முன்னறிவிக் கப்படுகிறது. இத்தூதரின் பெயர் குர்ஆனில் 19 முறை குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இறைவன் தூதர்களுக்காகக் கூறும் அடையாளங்களை அவர் முற்றிலும் பூர்த்தி செய்கிறார். எல்லா இறைத் தூதர்களைப் போலவே மெய்ப்பிக்கும் தூதரான ரஷாத் கலீஃபாவின் முதல் செய்தியும் 'ஒரே இறைவனை மட்டும் வணங்குங்கள் என்பதே! மேலும் எல்லாத் தூதர்களையும் போலவே அவர் தன்னை இறைத் தூதர் என்று அறிவித்து தெளிவான ஆதாரங்களையும் தந்தார். 19ன் அடிப்படையில் குர்ஆனில் இறைவனால் அமைக்கப்பட்ட ரகசியக் குறியீட்டுச் (Coded Message) செய்தியை அவர் அனைவரும் ஏற்று விளங்கிக் கொள்ளும்படி விளக்கிக் கூறினார் (Decode). நிலையான மாபெரும் அற்புதத்தின் பல பரிமாணங்களை நாம் 'இறைவனின் முத்திரை 19' என்ற தொடர் கட்டுரையில் கண்டு வருகிறோம். மேலும் மற்ற எல்லா இறைத் தூதர்களையும் போலவே தன் தூதுத்துவத்திற்கென அவர் மனிதர்களிடத்தில் கூலி எதனையும் பெற்றுக் கொள்ளவில்லை. சத்தியத்தை எடுத்துரைத் ததற்காவும், இன்றைய 'இஸ்லாத்தில் புகுந்து விட்ட இணைவைப்புக் கொள்கை களையும், சிதைவுகளையும் அடைாளம் காட்டியதற்காகவும் அவர் (ஜனவரி 1990) சுட்டுக் கொல்லப்பட்டார். ஆயினும் அவருடைய செய்தி தொடர்ந்து பரவுவதற்கு இறைவன் வழிவகைகளைச் செய்திருக்கிறார். இன்றைய இஸ்லாத்தில்மட்டுமல்ல, யூதம், கிறித்துவம் இன்னும் மற்ற மதங்களிலும் புகுந்திருக்கும் சீர்கேடுகளை சுட்டிக்காட்டவும் களையவும் அவர் தன் வாழ்நாளின் இறுதி வரை உழைத்தார். மெய்ப்பிக்கும் தூதரின் முக்கிய இறைப்பணிகளில் ஒன்று அவருடைய ஆங்கில மொழி பெயர்ப்பாகும். குர்ஆனுக்கான ஆங்கில மொழிபெயர்ப்பை

இறைவனின் அனுமதியுடன் அவர் நிறைவு செய்தார். அம்மொழி பெயர்ப்பு இன்று உலகெங்கிலும் உள்ள இன்டெர்நெட் மையங்களில் Internet கிடைக்கிறது. மேலும் புத்தக வடிவிலும் அம்மொழி பெயர்ப்பு உள்ளது. குர்ஆனின் அரபி மூலத்திலிருந்து செய்யப்பட்ட நேரடியான அவருடைய ஆங்கில மொழிபெயர்ப்பானது, முன் கூட்டி, முடிவெடுத்த மற்றும் இணை வைப்புக் கொள்கைகள் நிறைந்த கருத்தாகக்கங்களால் ஊடுருவி விட்ட ஏனையோர்களின் முன்னைய குர்ஆன் மொழி பெயர்ப்புக்களில் இருந்து முற்றிலும் தூய்மையானது. அம்மொழி பெயர்ப்பு மற்ற அனைத்து மொழி பெயர்ப்புக்களை விடவும், எல்லாக் கோணங்களிலும் சிறந்து நிற்கிறது. ரஷாத் கலீஃபாவை இறைவன் மெய்ப்பிக்கும் தூதராக அனுப்பியதற்கான காரணமும் அதில் விளங்குகிறது.

நாம் இப்பகுதியில் குர்ஆன் வசனம் 22:15ன் மற்ற மொழி பெயர்ப்புக்களையும், மெய்ப்பிக்கும் தூதரின் மொழி பெயர்ப்பையும் ஒப்பிட்டு ஆய்ந்து, அறிந்து விளங்கிக் கொள்வோம்.

22:15க்கான **Pickthallன்** ஆங்கில மொழிபெயர்ப்பு.

"Whoso is wont to think (through envy) that Allah will not give him (Muhammed) Victory in the world and the hereafter (and is enraged at the thought of his victory) let him stretch a rope up to the roof (of his dwelling) and let him hang himself. Then let him see his strategy dispelleth that wherat he rageth!

22:15க்கான Yusuf Ali யின் ஆங்கில மொழிபெயர்ப்பு:

"If any one thinks that God willnot help him (the Apostle) in this world and the hereafter, Let him stretch out a rope to the cieling and cut (himself) off. Then let him see whether his plan will remove that which enrages (him)!

அத்தியாயம் : 22:15 க்கான ஜான் டிரஸ்ட் மொழிபெயர்ப்பு.

எவன் (நம் தூதர்மேல் பொறாமை கொண்டு) அல்லாஹ் அவருக்கு இவ்வுலகிலும், மறுமையிலும் உதவி செய்யமாட்டான் என்று எண்ணுகிறானோ, **அவன் ஒரு கயிற்றை வானத்தின் அளவுக்கு நீட்டிப் பின்னர் (நபிக்குக் கிடைத்து வரும் இறையருளைத்) துண்டிக்க (முற்பட)ட்டுமே!** இந்த வழி தன்னை ஆத்திரமூட்டச் செய்வதைப் போக்குகிறதா என்று பார்க்கட்டும்!

**22:15க்கான அப்துல் ஹமீது பாகவியின் மொழிபெயர்ப்பு.**

எவன் (நம்முடைய தூதர் மீது பொறாமை கொண்டு) அவருக்கு அல்லாஹ் இம்மையிலோ, மறுமையிலோ நிச்சயமாக உதவி செய்ய மாட்டான் என்று (தன்னுடைய பொறாமையின் காரணமாக) எண்ணுகின்றானோ

அவன், மேல் முகட்டில் ஒரு கயிற்றைக் கட்டிச் சுருக்குப் போட்டு, அதில் கழுத்தை மாட்டி)த் துண்டித்துக் கொண்டு, தான் பொறாமை கொண்ட (அல்லாஹ்வின் உதவியைத்) தன்னுடைய உபாயம் மெய்யாகவே போக்கிவிட்டதா என்று பார்க்கவும்.

**22:15க்கான அப்துல் வஹ்ஹாப், நிஜாமுதீன் மன்ஈ. ஆகியோரின் மொழிபெயர்ப்பு.**

அல்லாஹ் (தன் ரஸீலாகிய) அவருக்கு இம்மையிலும் மறுமையிலும் உதவி செய்யவே மாட்டான் என்று எவன் எண்ணு கிறானோ, அவன் வானத்தின் பக்கம் ஒரு கயிற்றை மாட்டிக் கொள்ளவும். பிறகு (அதில் தன் கழுத்தை மாட்டிக் கொண்டு அ தனை) அவன் துண்டித்து விடவும்; இப்பொழுது அவனுடைய சூழ்ச்சி அவன் கோபங் கொண்டதை திண்ணமாகப் போக்கிவிட்டதா என்று அவன் கவனிக்கட்டும்.

**22:15க்கான I F T மொழி பெயர்ப்பு.**

இம்மையிலும் மறுமையிலும், தனக்கு எவ்வித உதவியும் அல்லாஹ் புரிந்திட மாட்டான் என்று எவன் சந்தேகம் கொள்கின்றானோ அவன் ஒரு கயிற்றின் துணையால் வானத்திற்குச் சென்று அதைப் பிளக்கட்டும். பின்னர், தனது உபாயத்தைக் கொண்டு தனக்கு எது வெறுப்பாய் உள்ளதோ, அதைத் தடுத்திட முடியுமா என்று பார்க்கட்டும்.

**22:15க்கான காதியானிகளின் மொழிபெயர்ப்பு.** (22:16)

அவர்களுக்கு (அதாவது நபி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு) இவ்வுலகிலும், மறு உலகிலும் அல்லாஹ் ஒருபோதும் உதவி செய்ய மாட்டான் என்று எண்ணுபவர் **ஒரு கயிற்றை வானம் வரை கொண்டு சென்று (அதன் மீது ஏறி ) பின்னர் அதனைத் துண்டித்து விடட்டும்.** இதன் பின்னர் அவரது திட்டம் அவரைக் கோபத்திற் குள்ளாக்கிக் கொண்டிருப்பவற்றை (அதாவது நபிகள் நாயகத்திற்கு இறைவனிடமிருந்து கிடைத்துக் கொண்டிருக்கும் உதவிகளையும், வெற்றிகளையும்) அகற்று கின்றதா வென்பதை அவர் பார்க்கட்டும்.

22:15க்கான மற்ற மொழி பெயர்ப்புக்களைக் கண்ட நாம் நிச்சயம் அவற்றிலிருந்து ஒன்றையும் புரிந்து கொள்ள முடியாது என்பதை அம்மொழி பெயர்ப்புக்களைச் சிந்திக்கும் போது உணர்ந்து கொள்ள முடியும். இவர்கள் அனைவரும் ஒரே விதமாக, குழப்பம் தரும் வகையில் மொழிபெயர்த்துள்ளனர். **இவர்கள் மக்களைக் குழப்புவதோடு மட்டுமல்லாமல், குர் ஆன் சிலரைத் தற்கொலை செய்யத் தூண்டுவது, போல் மொழிபெயர்த்துள்ளனர்.**

இதன் மூலம் (4:29) நீங்கள் தற்கொலை செய்து கொள்ளக் கூடாது' என்ற வசனத்திற்கு முரண்பாடாக உள்ள வசனம் போன்ற ஒரு தோற்றத்தை உண்டு பண்ணு கின்றனர். குர்ஆனில் முரண்பாடுகளே இல்லை என்பது இறைவனின் வாக்கு.

**இப்போது நாம் 22:15க்கான மெய்ப்பிக்கும் தூதரின் ஆங்கில மொழி பெயர்ப்பையும் , அதன் தமிழாக்கத்தையும் காண்போம்.**

"If any one thinks that God cannot support him in this life and in the hereafter let him turn completely to (his creator in) heaven and sever (His dependence on anyone else). He will then see that this plan eliminates anything that bothers him.

**இதன் தமிழாக்கம் :**

'யாரேனும், இறைவன் அவனுக்கு இவ்வுலக வாழ்விலும், மறுமையிலும் உதவி செய்ய முடியாது என்று நினைத்தால், **அவன் வானத்தில் (உள்ள அவனைப் படைத்த இறைவனின் பால்) முற்றிலும் திரும்பி (யாரையும் சார்ந்திருப்பதைத்) துண்டித்துக் கொள்ளட்டும்.** இத்திட்டம் அவனைத் தொல்லை செய்து கொண்டிருந்த எந்த ஒன்றையும் நீக்குவதை அவன் காண்பான்

மற்ற மொழிபெயர்ப்புக்களின் இருந்து இம்மொழி பெயர்ப்பு தனித்து. விளங்குவதை நாம் காண்கிறோம். மெய்ப்பிக்கும் தூதரின் மொழி பெயர்ப்பு புத்துணர்ச்சி அளிப்பதாகவும், இறைவனின் மேல் நமக்குள்ள நம்பிக்கையை அதிகப்படுத்து வதாகவும் உள்ளது. மற்ற மொழிபெயர்ப்புக்கள் 'தூதருக்கு இறைவன் உதவி செய்வதில் பொறாமை கொண்டவன் 'தற்கொலை செய்து கொள்ளட்டும்' அல்லது அதைத் தடுக்க முயற்சிக்கட்டும் என்ற கருத்துக் களை கூறுகிறது. மெய்ப்பிக்கும் தூதரின் மொழி பெயர்ப்போ 'வாழ்க்கையில் விரக்தி நிலையை அடைந்தவன் மற்றவர்களைச் சார்ந்திருப்பதைத் துண்டிகத்துக் கொண்டு இறைவனின் பால் முற்றிலும் திரும்பி அவர் மேல் நம்பிக்கை வைத்தால் நம் விரக்தி நிலை மாறுவதைக் காண்போம் என்கிறது..இரண்டையும் ஒப்பிட்டுச் சிந்திப்பவர்கள் அவற்றுக்கு இடையில் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காண்பார்கள். இரண்டில் எது சரியான, சிறந்த மொழிபெயர்ப்பு என்பதை அறிவுடையோர் நிச்சயம் விளங்கிக் கொள்வார்கள்.

இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் இவர்களால் சிதைக்கப் பட்டிருக்கும் வசனம் 21:107ன் சரியான மொழியாக்கம் வெளியிடப்படும்.

# தூதர்களும் ஆதாரங்களும்

**இறைவன் தூதர்களை ஆதாரங்களுடன் அனுப்புவாரா?**

இந்த ஆதாரங்கள் யாருக்காக அல்லது எதற்காக தீர்மானிக் கப்பட்டு அனுப்படுகின்றன?

இந்தக் கேள்விக்கான பதில் குர்ஆனில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இவ்விரு கேள்விகளுக்கும் வெகு சுலபமாகவும் அறிவு பூர்வமாகவும் நாம் விடை காணலாம்.

1. இறைவன் தூதர்களை ஆதாரங்களுடன் அனுப்புகின்றார். (உம். 64:6; 57:25; 40:22, 50, 83; 35:23; 10:13; 9:70; 7:101; 5:32; 3:183,184)

2. விசுவாசிகள் மட்டுமே அவற்றைக் காணவும், ஒப்புக் கொள்ளவும் முயல்வார்கள்.

3. நிராகரிப்பாளர்கள் எந்த விதமான ஆதாரங்களையும் காணவோ, அவற்றை ஒப்புக் கொள்ளவோ மாட்டார்கள். (6:4, 25, 35; 2:145; 7:132, 146; 10:96-97; 30:58; 36:46; 37:14; 54:2)

4. நிராகரிப்பாளர்கள் ஆதாரங்களைக் காணவோ , ஒப்புக் கொள்ளவோ மாட்டார்கள் என்பதை இறைவன் நன்கறிவார். ஆயினும் அவர் தூதர்களுடன் ஆதாரங்களையும் அனுப்பாமல் நிறுத்தி விடுவதில்லை. இந்த விவரங்களிலிருந்து யாராயிருந் தாலும் இவ்விரு கேள்விகளுக்கும் விடைகளை அறிந்து கொள்ளலாம்.

இறைவன் தூதர்களை ஆதாரங்களுடன் அனுப்புவாரா? ஆம். அனுப்புவார்.

யாருக்காக இறைவன் ஆதாரங்களை அனுப்புகிறார்? விசுவாசிகளுக்காக. ஆதாரங்களைக் கேட்பவர்கள்யாவர்? சம்பந்த மற்றவர்கள்.

இவ்விவரங்களின் உண்மையாவது, தூதர்கள் ஆதாரங்களுடன் அனுப்பப் படுவதுடன் அந்த ஆதாரங்கள் பிரத்தியேகமாகத் தேர்ந்தெடுக் கப்பட்ட விசு வாசிகளுக்காகவே அனுப்பப் படுகின்றன என்பதே யாகும்.

இது ஏனெனில், **தெளிவான ஆதாரங்களுடன் அவர்களிடம்** தூதர்கள் வந்தார்கள். ஆனால் அவர்களோ, "மனிதர்களா நமக்கு நேர்வழிகாட்டிகள்?" என்று கூறி நிராகரிக்கவும் புறக்கணிக்கவும் செய்தனர். இறைவன் அவர்களின் தேவையற்றவர். இறைவன் தேவையற்றவராகவும்

புகழுடையவராகவும்இருக்கின்றார். (64:6)

இது ஏன் எனில், **தெளிவான ஆதாரங்களுடன் அவர்களிடம்** தூதர்கள் வந்தார்கள். ஆனால் அவர்கள் நிராகரித்தனர். ஆகவே அல்லாஹ் அவர்களைத் தண்டித்தார். அவர் மிக்க பலமுடைய வரும் வேதனை செய்வதில் கடினமான வரும் ஆவார். (40:22) அவர்களுடைய தூதர்கள் தெளிவான ஆதாரங்களுடன் அவர்களிடம் வந்தபொழுது, அவர்கள் தாங்கள் பரம்பரையாய்ப் பெற்ற அறிவைக் கொண்டு மகிழ்ச்சியடைந்து கொண்டிருந் தனர். மேலும் அவர்கள் பரிகாசம் செய்து கொண்டிருந்தது அவர்களைச் சூழ்ந்து கொண்டது. (40:83) அவர்கள் உம்மை நம்ப மறுத்தால், அவர்களுக்கு முன்னிருந் தவர்களும் நம்ப மறுத்தனர். அவர்களுடைய தூதர்கள் **தெளிவான ஆதாரங்களையும்** 'ஜபூர்' ஐயும் பிரகாசமான வேதங்களையும் அவர்களிடம் கொண்டு வந்தேயிருந்தனர். (35:25)

உங்களுக்கு முன்னிருந்த எத்தனையோ தலைமுறையினரை அவர்கள் செய்து கொண்டிருந்த அக்கிரமத்தின் காரணமாக நாம் அழித்து விட்டோம். அவர்களுடைய தூதர்கள் தெளிவான ஆதாரங்க ளையே அவர்களிடம் கொண்டு வந்தனர். எனினும் அவர்கள் நம்பவேயில்லை. குற்றம் செய்யும் . மக்களுக்கு இவ்வாறே நாம் கூலி கொடுப்போம். (10:13)

இவர்களுக்கு முன்னிருந்த நூஹ்வுடைய மக்கள், ஆத், ஸமுது, இப்ராஹீம் உடைய மக்கள், மத்யன் ஊரார், தீய வழியில் சென்றவர்கள் ஆகியோரின் தூதர்கள் **தெளிவான ஆதாரங்களை அவர்களிடம்** கொண்டு வந்தார்கள். அல்லாஹ் ஒருபோதும் அவர்களுக்குத் தீங்கிழைக்கவில்லை. அவர்கள் அவர்களுடைய ஆன்மாக்களுக்கே தீங்கிழைத்துக் கொண்டனர். (9:70)

இவ்வூர்களின் சரித்திரத்தை நாம் உமக்கு விவரிக்கின்றோம். அவர்களுடைய தூதர்கள் **தெளிவான ஆதரங்களுடன் அவர்களிடம்** வந்தனர். ஆனால் அவர்கள் முன்னர் ஏற்க மறுத்து விட்டதை விசுவாசம் கொள்ள வில்லை. இவ்வாறே நிராகரிப்போரின் இருதயங்களில் அல்லாஹ் முத்திரையிட்டு விடுகின்றார். (17:101)

இதன் காரணமாகவே, எவனொ ருவன் மற்றோர் ஆத்மாவை கொலைக்குப் பிரதியாகவோ அல்லது பூமியில் அக்கிரமத்தைத் தடை செய்வதற்காகவோ அன்றி கொலை செய்கின்றானோ, அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான். அன்றி எவன் ஓர் ஆத்மாவை வாழ வைக்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையுமே வாழவைத்தவன் போலாவான். என்று இஸ்ராயீலின் சந்ததிகளுக்கு நாம் வரைந்து விட்டோம். நம் தூதர்கள் அவர்களி டம் தெளிவான ஆதாரங்களுடனும் வேத வெளிப்பாடுகளுடனும்

வந்தனர். இவை அனைத்திற்கும் பின்னரும் அவர்களில் பெரும்பாலோர் வரம்பு மீறியவர்களாகவே இருந்தனர். (5:32)

இதனை அவர்கள் கூறுகின்றனர்: "எத்தூதராயினும் அவர் கொடுக்கும் குர்பானியை நெருப்பு புசிக்காதவரையில் நாங்கள் விசுவாசிக்கக் கூடாதென்று அல்லாஹ் எங்களிடம் உறுதிமொழி வாங்கி யிருக்கிறார்." கூறும்: "எனக்கு முன்னர் வந்த தூதர்கள் உங்களிடம் தெளிவான ஆதாரங்களுடனும் நீங்கள் கேட்டவற்றையும் கொண்டுவந் தனர். நீங்கள் உண்மை கூறுபவர்களா யிருந்தால் ஏன் அவர்களைக் கொலை செய்தீர்கள்?"

அவர்கள் உம்மை ஏற்க மறுத்து விட்டால், உமக்கு முன்னர் வந்த தூதர்களையும் அவர்கள் ஏற்க மறுத்துவிட்டனர். அவர்களும் தெளிவான ஆதாரங்களுடனும் ஜபூரையும், பிரகாசமான வேதத்தையும் கொண்டு வந்தே இருந்தனர். (3:184)

**என்ன அகங்காரம்?**

இறைவன் மிகமிகக் கருணையுடையவராக இருக்கின்றார். அவர் மக்களிடம் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு தன்னை மட்டுமே விசுவாசம் கொள்ளுமாறு மக்களுக்கு அழைப்புக் கொடுக்கின்றார். 5 அவருக்கேயுரிய ஆதாரங்ளில் அவர் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறார்.

யாதொரு ஆதாரத்தைக் கேட்காமலிருப்பதற்கோ அல்லது வழிகாட்டு தலை மட்டும் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது மிகச் சிறந்த நன்மையை எதிர்பார்த் திருப்ப தற்கோ மட்டும் இறைவன் ஆதாரங்களை அனுப்புவதில்லை. ஆதாரங்களின் மூலம் இறைவன் தன்னை வெளிப்படுத்திக் கொள் கின்றார். இறைவன் மிகக் கருணையுள்ளவர். மனிதர்களில், சிந்திக்கக் கூடிய தகுதி வாய்ந்த மூளையை யாருக்கு அவர் கொடுத்திருக்கின்றாரோ, அவருக்கு ஒரு ஆதாரம் தேவைப்படுகின்றது என்பதை இறைவன் அறிந்திருப் பதால் அவருக்கு அதனை அளிக்கின்றார். பார்க்க: 2:164 ; 3:190; 6:46, 99; 7:26; 57:58; 10:5-6, 67; 13:2-4; 16:9-16: 16:78-81; 20:53-54; 20:128; 27:86; 30: 19-27; 45;5, 13; 57:17; 27:93; 30:20-25; 30:46; 31:31; 40:13; 40:81; 41:37-39; 42;29-32; 21:32.

மேலும் மனிதர்கள் அதிகமான ஆதாரங்களைக் கேட்டார்களானால் அவர்களுக்கு அதிகமாகவும் கொடுக்கிறார். அவற்றை அவர்களிடம் விளையாட்டுக்காகக் கொடுக்கவில்லை. ஆயினும் அவர்களுடைய பொறுப்பை அதிகமாக்கிக் கொள்ளவே கொடுக்கின்றார். (உம். 5:112, 7:143; 2:260;; 17:101; 2:67-73; 2:60) ஆதாரங்க ளுடன் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் இறைவன் மனிதர்களைத் தூதர்களாக ஆதாரம் எதுவுமேயின்றி அனுப்புவார் என்று ஒரு சராசரி மனிதன்

நினைக்க முடியுமா? இறைவனைப் பற்றி அவன் அறிந்து கொள்வதற்கு உதவியாக ஒரு ஆதாரம் தேவையில்லை என்று நினைக்கும் மனிதன் இறைவனை விடத் தன்னை மேலானவனாக நினைத்துக் கொள்வது அகங்காரம் இல்லையா?

ஒரு ஆதாரம் தேவையாயிருப் பவர் யார்? வரலாறு திரும்புகிறது. சில முஸ்லிம்கள் கூறுகின்றனர். "நாங்கள் குர் ஆன் இறைவனிட மிருந்து வந்தது என்று நம்புகிறோம். எங்களுக்கு அது பற்றிய கணித அற்புதம் பற்றி அறிந்து கொள்ளத் தேவையில்லை.

எனவே, அற்புதங்கள் இங்கே எதற்கு?

இறைவன் ஏன் ஆதாரங்களை (அற்புதங்களை) அனுப்புகின்றார்? யாருக்காக? 63வது சூராவில், நயவஞ்சகர்கள் (வேஷதாரிகள்) முஹம்மத் நபியிடம் அவர் இறை தூதர்தான் என சாட்சி கூறுகின்றனர். என்றாலும் அவர்களது இருதயங்களில் அவரது தூதுத்துவம் பற்றியும் அவர் கொண்டு வந்த தூதைப் பற்றியும் நிறைய சந்தேகங்கள் கொண்டிருந் தனர். அவர்கள் உண்மையில் இறை நம்பிக்கை கொள்ளாதவர்களாவர். அவர்கள் நபியை சந்தோஷப்படுத்து வதற்காக அவ்வாறு கூறுவதால் அதிகமான ஆதாரங்கள் எதுவும் அவருக்குத் தேவையாயிருக் கவில்லை . வரலாறு திரும்புகிறது.

இன்றைய காலகட்டத்தில் அநேக முஸ்லிம்கள் குர் ஆன் இறைவனது த வார்த்தை என்பதை அறிந்திருப் பதாகக் கூறினாலும், அவர்கள் குர்ஆனுக்குப் பதிலாக மனிதத் தயாரிப்புகளான பிற புத்தகங் களைப் பின்பற்றுகின்றனர். அவர்கள குர்ஆனைப் புறக்கணித்து விட்டனர் என்று இறைவனிடம் தூதர் சாட்சி கூறுவதே இதற்கான மிகச்சிறந்த காரணமாகும். (பார்க்க 25:30)

ஆனால் அற்புதங்களைக் (ஆதாரங்கள்) கேட்பவர் யாவர் த் என்பது பற்றியும், சர்வ வல்லமையுள்ள இறைவன் யாருக்கு அற்புதங்களை அனுப்புவதாகக் கூறு கிறார் என்பது பற்றியும் நாம் இங்கு காண்போம்.

1. இறைவனுடைய மிகச் சிறந்த மேலும் உறுதியான விசுவாசிகள் அதிகமான ஆதாரங்களைக் கேட்பார்கள் என இறைவன் தனது குர்ஆனில் நமக்கு அறிவுறுத்து கின்றார். ஏற்கனவே அவர்களிட முள்ள இறை நம்பிக்கையை பலப்படுத்திக் கொள்ளவே அவர்கள் ஆதாரங்களை எதிர்பார்க்கின்றனர். இவர்களில் இப்ராஹிம் நபியும் ஒருவராவார். மேலும் மூஸா நபி இப்ராஹிம் நபியை விட அதிகமாக, இறைவனை அவர் கண்ணால் காண வேண்டும் என்று கேட்கின்றார்.

2. நிராகரிப்பாளர்களும், நயவஞ்சகர்களும் இறை அற்புதங்களுக்கு (ஆதாரங்கள்) சாட்சியாக மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் ஏற்கனவே விசுவாசிப்ப

தில்லை என்ற முடிவுக்கு வந்து விடுகின்றனர். இறைவனின் வழிமுறைக்கிணங்க (மார்க்கத்தில் நிர்பந்தமில்லை ) அவர்கள் அற்புதங் களுக்கு சாட்சியாக இருப்பதில்லை. அவர்கள் ஆதாரங்களை மறுத்து விடுவதை வழக்கமாகக் கொண்டிருப் பதுடன், அவை கண் முன்னால் பிரசன்னமாகி இருக்கும் போது கூட அவற்றை அவர்கள் காணமாட் டார்கள்.

3. ஏற்கனவே விசுவாசத்தில் உறுதியாக இருக்கும் மக்களுக்கு சாட்சியாக இறைவன் ஆதாரங்களை அனுப்புவதாகக் குர் ஆனில் இறைவன் வெகு தெளிவாக நமக்கு அறிவுறுத்துகிறார். (2:118) பலஹீனமான விசுவாசிகளுக்கோ , நயவஞ்சகர்களுக்கோ ஆதாரங்கள் சாட்சியாக இருப்பதில்லை.

4. இறைவன், குர்ஆனில் கூறப்பட்டுள்ள கணித அற்புதம் போன்ற ஆதாரங்களை அற்புதங்களை அனுப்பும் போது, குறிப்பிட்ட காரணங்களுக்காகவே அவர்களுக்கு சாட்சியாக அனுப் புகின்றார். (பார்க்க : உ.ம். 74:31) அவற்றின் தேவையற்றவர்கள் (சம்பந்த மற்றவர்கள்) அவற்றைத் தூக்கி எறிந்து விடுகின்றனர். இறைவன் தகுந்த காரணமின்றி எதையும் அனுப்புவதில்லை. இறைவன் முற்றும் அறிந்தவராக இருக்கின்றார்.

5. தங்களுக்கு ஆதாரங்கள் - அற்புதங்கள் தேவையில்லை என்று கூறுபவர்கள்அவற்றின் தேவையுடையவர்களாயிருப்பினும் அதனை அவர்கள் அறிந்து கொள்ள முன்வருவதில்லை. ஒரு உண்மை யான இறை நம்பிக்கையாளர் தன்னைப் படைத்தவரிடமிருந்து ஒரு ஆதாரம் - அற்புதம் வரும் போது அதனை ஒருபோதும் மறுக்க மாட்டார். குர்ஆனைப் புறக்ணித்து ஹதீதுகளையும் சுன்னத்களையும் பின்பற்றுபவர்கள் மட்டுமே குர்ஆன் இறைவனுடைய வார்த்தை என்பதைத் தாங்கள் ஒப்புக் கொள்வதாகவும், அதற்கு ஆதாரம் தேவையில்லை என்றும் கூறுகின் றனர். அவர்கள் இறைவனால் அனுப்பப்பட்ட ஆதாரத்தை அற்புதத்தை மறுப்பது அவர்கள் நம்புவதாகக் கூறும் குர்ஆனையே மறுப்பதாகத்தான் இருக்கிறது.

**சுருக்கம்:**

வழக்கமாக, ஏற்கனவே இறை விசுவாசத்தில் உறுதி கொண்ட விசுவாசிகளுக்கே இறைவனது அற்புதங்கள் தேவையாக இருப்பதுடன், அவர்கள் மட்டுமே அது இறைவனிடமிருந்து வந்ததே என சாட்சி கூறி ஏற்றுக் கொள்வார்கள். வழக்கமாக, நயவஞ்சகர்களும், பலஹீனமான விசுவாசிகளும் தங்களது பேரிழப்பை அறியாதவர்களாக, இறை அற்புதத்தைப் புறக்கணித்துத் தள்ளி விடுகின்றனர்.

புகழனைத்தும் இறைவனுக்கே!

# நரகம் நிரந்தரமானது

**"எவர் தீமையைச் சம்பாதித்து அந்தக் குற்றம் அவரைச் சூழ்ந்து கொள்கிறதோ அத்தகையோர், நரகவாசிகள் அவர்கள் அதில் என்றென்றும் இருப்பார்கள்"**

"ஒரு சில நாட்கள் தவிர எங்களை நரக நெருப்பு தீண்டாது" என்று அவர்கள் கூறு கிறார்கள். அல்லாஹ்விடமிருந்து அப்படி ஏதேனும் உறுதிமொழி பெற்றிருக் கிறார்களா? அப்படியாயின் அல்லாஹ் தன் உறுதிமொழிக்கு மாற்றம் செய்யவே மாட்டார். அல்லது நீங்கள் அறியாததை அல்லாஹ் சொன்னதாக இட்டுக்கட்டிக் கூறுகின்றீர்களா? என்று நீர் கேளும்.

அப்படியல்ல! எவர் தீமையைச் சம்பாதித்து அந்தக் குற்றம் அவரைச் சூழ்ந்து கொள்கிறதோ அத்தகை யோர், நரகவாசிகள் அவர்கள் அதில் என்றென்றும் இருப்பார்கள். அத். 2:80,81

மேற்குறிப்பிட்ட இரு வசனங் களும் நரகம் நிரந்தரமானது என்று குறிப்பிடுகிறது. ஆனால் இவர்கள், நபியால் கூறப்பட்ட நபிமொழிகள் என்று இவர்களால் நம்பப்படும் ஹதீஸ்களில் நரகம் என்பது நிரந்தரமானதன்று. அவரவர் செய்த பாவங்கள் அளவு நரகில் தண்டனை அனுபவித்து விட்டு பின்னர் சொர்க்கம்செல்வர்என்றுகூறுகிறது.

மேலும் முகம்மது நபி மறுமையில் அல்லாஹ்விடம் சிபாரிசு செய்வார் என்றும் ஹதீஸ்களில் காணப்படுகிறது. ஆனால் இறைவன் தெளிவாக தனது திருமறையில் 74:48ல் சிபாரிசு செயவோரின் எந்தச் சிபாரிசும் அவர்களுக்கு பயனளிக்காது என்று கூறியுள்ளார்.

இது இறைமொழியாகிய குர்ஆனுக்கு எந்த அளவுக்கு முரண்படுகிறது என்பதை சிந்தித்து உணரும் மக்கள் நிச்சயமாக குர் ஆன் ஒன்றே மார்க்கம் என்பதை அறிவர். ஏனென்றால் நபி ஒருபோதும் குர் ஆனுக்கு மாற்றமாக சொல்லி யிருக்க மாட்டார் என்பதை உண்மையான முஃமீன்கள் நிச்சயம் அறிந்து கொள்வர்.

இடது கையில் சாப்பிடக் கூடாது, நீர் அருந்தக் கூடாது. தொப்புளுக்கு மேலே ஆடை கட்ட வேண்டும். பாத முட்டிக்கு மேல்தான் ஆடை இருக்க வேண்டும். தாடி கைப்பிடி அளவு இருக்க வேண்டும். தாடியை சிரைக்கக்கூடாது. வெட்ட வேண்டும். மீசை வைக்கக் கூடாது. ஆடையின் நுனி மண்ணில் புரள நடப்பவர்களை ஆண்டவன் மறுமையில் திரும்பிப்பார்ப் பதில்லை. ஆண்கள் பட்டாடை, தங்கம் போன்றவற்றை அணியக்கூடாது என்பது போன்றவை நம் வாழ்வில் நமக்கு வெளியே தெரிந்த ஹதீஸ்களின் நிலைமை. இதைப் பற்றி சிறிதளவேனும் இறைவன் தனது பேதமாகிய குர்ஆனில் குறிப்பிட வில்லை. இவை எல்லாம் நபியின் பேரால் இட்டுக்கட்டிய ஹதிஸ்கள் என்னும் சாத்தானிய குப்பைகள்.

அல்லாஹ் தன் திருமறையில் வேதமுடையவர்களே நீங்கள்

உங்கள் மார்க்கத்தில் உண்மையில் லாததைக் கூறி வரம்பு மீறாதீர்கள் என்று எச்சரித்துள்ளார்.

மேலும் 21:59, 24:46 போன்ற வசனங்களில் :

இன்னும் இது (குர்ஆன்) நாம் அருள் செய்த பாக்கியமிக்க புனிதமான உபதேசமாகும். இதனையா நீங்கள் புறக்கணிக் கிறீர்கள்?

நிச்சயமாக நாம் தெளிவுபடுத்தும் வசனங்களையே இறக்கியிருக் கிறோம். மேலும் தான் நாடியோரை அல்லாஹ் நேர்வழிப்படுத்துகிறார்.

அல்லாஹ்வின் இந்த வசனங்கள் தெளிவானவை. ஆனால் இவர்கள் குர்ஆன் உங்களுக்கு புரியாது. அதன் வசனங்களின் அர்த்தங்களை அறிவது கடினம் என்றும், ஹதீஸ்களின் துணையின்றி அதை தெளிவுபடுத்த முடியாது, அறிய முடியாது என்று கூறி வருகின்றார்கள். (அஸ்தஃ பிருல்லாஹ்)

என்ன ஒரு அறிவீனம்! அல்லாஹ் தனது திருமறையின் மூலம் புரிய வைக்க முடியாததை இவர்கள் இட்டுக்கட்டிய ஹதீஸ்கள் புரிய வைக்குமா என்ன?

அத் 2:79ல் மேலும் அவர்களில் வேத அறிவில்லாதவர்களும் இருக்கின்றனர். கட்டுக் கதைகளை தவிர வேதத்தை அறிந்து வைத்திருக்கவில்லை. மேலும் அவர்கள் கற்பனை செய்வோர் களாக அன்றி வேறில்லை. அல்லாஹ் எல்லாவற்றையும் பற்றி தனது திருமறையில் மிகவும் தெளிவுபடக் கூறியிருக்கிறார். அத் 39:45ல்

மேலும், அல்லாஹ் மட்டும் தனித்தவராகக் கூறப்பட்டால் மறுமையை ஈமான் கொள்ளா தவர்களின் இருதயங்கள் சுருங்கி விடுகின்றன. மேலும் அவரையன்றி மற்றவர்களின் பெயர்கள் கூறப்பட்டால் உடனே அவர்கள் பெரிதும் மகிழ்கிறார்கள்.

லாயிலாஹ இல்லல்லாஹு என்று கூறப்பட்டால் முகம் சுளிக்கும் இவர்கள், லாயிலாஹ இல்லல்லாஹ் முகம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று சேர்த்து கூறப்பட்டால் பூரிப்படைகிறார்கள். எல்லாவற்றையும் பற்றி அல்லாஹ் தன் திருமறையில் மிகவும் அழகான முறையில்தெளிவுப்படுத்தியுள்ளார்.

மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து நிச்சயமாக ஒரு நல்லுபதேசம் வந்திருக்கின்றது. உங்கள் இதயங்களிலுள்ள நோய்களுக்கு அது ஓர் அருமருந்தாகவும், விசுவாசங் கொண்டவர்களுக்கு நேர் வழிகாட்டி யாகவும், நல்லருளாகவும் இருக்கின்றது.

குர்ஆன் ஒன்றே நேர்வழி காட்டும் என்பதை இந்த வசனத்தின் மூலம் அல்லாஹ் நமக்கு தெளிவுப்படுத்துகிறார். எனவே சிந்தித்து குர்ஆன் ஒன்றே மார்க்கம் என்பதை அறிந்து கொள்வோம். மேலும் ஹதீஸ்கள் என்னும் சேற்றில் இறங்காமல், நாம் நம் இறைவனிடம் மீள்வதற்கு உதவி செய்யும் நேர்வழிகாட்டியான குர் ஆனை மட்டும் பின்பற்றி மறுமை நாளின் வெற்றியாளர்களாக மாறுவோம். இன்ஷா அல்லாஹ்.

அல்ஹம்துலில்லாஹ்

☆ ★ ☆

# நேருக்கு நேர்

சென்ற இதழின் தொடர்ச்சி

15 ஆண்டுகளுக்குப் பின் தங்களது 35வது வயதில் சந்தித்துக் கொண்டு உரையாடும் இரு பால்ய நண்பர்கள். அல்லாஹ்வுக்குப் பொருத்தமாகவும், சக மனிதர்களுக்கு உதவியாகவும் வாழ லட்சியம் எடுத்துக் கொண்டு அதன்படி வாழ்வதாகவும் நம்புகின்ற அவர்களின் சந்திப்பு.

**மன்சூர் :** ஸலாமுன் அலைக்கும் ரஹீம் ஆலிம்ஷா .

**அ. ரஹீம்** : வ அலைக்கும் அஸ்ஸலாம் மன்சூர். கடந்த மார்ச் மாதம் உன்னை சந்தித்துப் பேசியதில் சிறிது தெளிவும் நிறைய குழப்பமும்தான் மிஞ்சியது. ஒன்று மட்டும் உறுதியாக தெரிந்தது. அது ஒவ்வொருவரும் குர் ஆனை தாய்மொழியில் வரிக்கு வரி விளங்கி படிக்க வேண்டும் என்பது. அதனால் தான் நீ என்னைப்போல் ஆலிம் பட்டம் வாங்காவிட்டாலும் குர்ஆனை நன்கு அறிந்து வைத்திருக்கிறாய்.

**மன்சூர்**: குழம்பித் தான் தெளிவு ஏற்படும். குழப்பம் ஏற்படுகிற தென்று நாம் எதையும் அறிந்து கொள்ளாமல் விட்டு விட்டால் மூட நம்பிக்கையிலும், இணை வைப்பிலும் இருந்து மீள்வது எப்படி?

**அ. ரஹீம்** : முறையாக அரபி படித்து ஆலிம் பட்டம் வாங்கிய என்னையே மூடநம்பிக்கை, இணைவைப்பு, மீள்வது அது. இது என்று கூறுகிறாயே? குர்ஆன் வழிகாட்டவும் செய்யும், வழிகேட்டிலும் விட்டு விடும் தெரியுமா உனக்கு?

**மன்சூர்**: உனக்கு கோபம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன். கோபம் அறிவுக்கு சத்ரு, பகைவன். பொறுமையாகக் கேள் : நாம் இருவரும் அகந்தை (Ego) யை நீக்கி மனம் திறந்து பேசுவோம். இதற்கே இப்படி என்றால், இன்னும் 90 சதவிகிதம் மாற்றுக் கருத்தைப் பற்றி பேச வேண்டி இருக்கிறதே, நண்பனே.

**அ. ரஹீம்** : (மௌனமாக மனதிற்குள் பிரார்த்திக்கின்றார்) இறைவா எனக்குப் பொறுமையைக் கொடு .ஆலிம் என்றும், எல்லாம் தெரியும் என்ற அகந்தையையும் என்னிடமிருந்து அகற்றிவை. இந்த மனிதர் மூலம் நீ எனக்கு ஏதேனும் நல்ல விஷயங்களையும் தெளிவையும் கொடுக்கலாம்)

**அ.ரஹீம்** : சரி பொறுமையோடு பேசுவோம் நண்பரே.

**மன்சூர்** : இல்ம் என்றால் கல்வி. ஆலிம் என்றால் கல்வி கற்றவர். உலமா என்பது அதன் பன்மை சொல். மெர்கானிக் கல்வி, கம்ப்யூட்டர் கல்வி, மருத்துவக் கல்வி, ஆங்கில இலக்கியக் கல்வி, ஃபிரெஞ்சு மொழிக்கல்வி கற்றவர் இவர்களை எல்லாம் கல்வியாளர்கள் என்று அழைப்பது தவறாகும். இவர்கள் வெறும் தொழில் நிபுணத்துவம் பெற்றவர்கள். மொழியறிவு

கற்றவர்கள் மட்டுமே. அரபி கற்றவர்களும் மனனம் செய்தவர் களும் சாதாரண மொழியறிவு கற்றவர்கள் அவ்வளவே.

உண்மையில் கல்வியாளர்கள் யார் என்றால் அவர்கள் மனிதநேயம் மற்றும் சமூகப் பிரக்ஞை கொண் டவர்களாக இருக்க வேண்டும். மக்களுக்கு தீய, நல்ல காரியங்களை அடையாளம் காட்டி நேர்வழி காட்டக்கூடிய சான்றோர்களாக இருக்க வேண்டும். இறைவன் தனது திருமறையில் வசனம் (33:28) (35:28)ல் இறைவனுக்கு அஞ்சி நேர்வழி நடக்கக் கூடியவர்களே ஆலிம்கள் என்று கூறுகிறார்.

**அ.ரஹீம்** : உனது கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். நான் இறைவனுக்கு அஞ்சித்தான் நடக்கிறேன். நீ சுட்டிக்காட்டினால் இறையச் சத்துடன் திருத்திக் கொள்ள முயற்சிக்கிறேன்.

**மன்சூர்** : ரொம்ப சந்தோஷம். கேள்விகள் சிலவற்றைக் கேட்கி றேன்.

1. மார்க்கத்திற்கு விரோதமானது என்றாலும் சீதனம் என்ற கைக்கூலியை வாங்கும் மனிதர்களின் வீடுகளுக்கு சென்று சீதனப் பணத்தைக் கையால் தொட்டு தட்டில் வைத்து துவா செய்வது தவறில்லையா?

2. வாங்கும் சீதனப் பணத்தில் சில சதவிகிதம் பள்ளிக்கு வழங்க வேண்டும் எனக்கூறும் நிர்வாகி களுக்குஆலிம்களும் துணைதானே?

3. லட்சக்கணக்கில் பணமும் நகையும் சீதனமாகப் பெறுவது தெரிந்தும் உண்மையை மறைத்து 501, 1001 மஹர் என்று புத்தகத்தில் எழுதுவது தவறில்லையா?

4. குர்ஆன் பற்றி விளக்கம் கேட்பவர்களை குழப்பவாதி, காஃபிர் என்று கூசாமல் அவதூறு சொல்வது தவறில்லையா?

5. சுன்னத், வீடு குடியேறல், கல்யாணம், கத்தம், மவ்லூது இவை எப்படி செய்வது ஆலிம்ஷா என்று வருகிறவர்களுக்கு இதுக்கு இவ்வளவு பணம், இத்தனை பேர் வருவோம் என்று முன்கூட்டியே பேரம் பேசி மார்க்கத்தில் இல்லாததை கூறியும் பேரம் பேசியும் தவறு செய்தது உண்டுதானே?

6. குர்ஆனை தானும் தாய்மொழியில் விளங்கி ஓதாமல் பிறருக்கும் புரிய வைக்காமல் தினம் தினமும், ரமளானிலும் சடங்கு போன்று தொழ வைத்து மதரஸாவிலும் கூலி வாங்கி சொல்லிக் கொடுத்து பேணுதலில் தவறிழைத்தது உண்டுதானே?

**அ. ரஹீம்** : போதும் நண்பரே, நிறுத்தி விடுங்கள். நான் இதுவரை எனது சுயநலத்துக்கும் சமுதா யத்திற்கும் பயந்து இறையச்சமின்றி வாழ்ந்து தான் இருக்கிறேன். அல்லாஹ் என்னை மன்னிக்கட்டும். உண்மை இஸ்லாத்தை அறிந்து அமல் செய்ய விரும்புகிறேன்.

**மன்சூர்**: அல்ஹம்துலில்லாஹ்! மாஷா அல்லாஹ். இறைவன் நமக்கு நேர்வழி காட்ட பிரார்த்திக்கிறேன். சரி ஆலிம்ஷா அவசர வேலை இருக்கிறதென்றீர். மறுபடியும் சந்திக்கும் போது பேசுவோம்.

**அ.ரஹீம்** :(அவசரமாக மறுக்கிறார்) இல்லை நண்பரே, எல்லாம் தெரியும் என்ற என் அகந்தை போய்விட்டது. இறையச்சம்ஏற்படுகிறது. உங்களது

புதிய நினைவூட்டல் இதழ்களில் நாம் அதிகம் பேர் நம்பும் ஹதீஸுைம், ஸலவாத்தும், கலீமாவும், ஷிர்க் என்று எழுதியிருக்கிறீர்கள்.

அல்லாஹ் மீது ஆணையாக நான் உன்னை சந்திக்க வீட்டிலிருந்து புறப்படும் போதே ஷிர்க் என்று உறுதியாகத் தெரிந்த எதையும் பின்பற்றுவதில்லை என்று உறுதி யோடுதான் புறப்பட்டேன். எந்த நிமிடமும் மரணம் மனிதனுக்கு உண்டு. எனக்கு இப்பொழுதே இணை வைப்பு விஷயம் பற்றி தெளிவாகத் தெரிய வேண்டும். (கவலையோடு ஆனால் ஆர்வத் தோடு கேட்கத் தயாராகிறார்)

**மன்சூர்** : முக்கியமான ஒன்றிரண்டை மட்டும் இப்பொழுது கூறு கிறேன். குர் ஆனில் இல்லாத, மனிதர்கள் உண்டாக்கிய அத்தஹ் ஹியர்ததை தொழுகையில் ஓதுவது ஷிர்க். நபியை முன்னிலைச் சொல்லால் ''அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபியு". நபியே உமக்கு எங்களது ஸலாம் என்று கூறுவது ஷிர்க். இது இறந்தவர்கள் செவியேற்க மாட்டார்கள் என்ற இறை வசனத்திற்கு மாறு செய்வது. ஸலாமை மலக்குகள் நபியிடம் எத்தி வைப்பார்கள் என்ற சிலரது கூற்றும் தவறு. செவியேற்க மாட்டார்கள் என்பதில் முஹம்மத் நபியும் உட்பட்டவர்கள்தான்.

2. 17:110-ல் தொழுகையில் அதிக சப்தமிட்டோ , மனத்திற் குள்ளோ ஓதக்கூடாது. இரண்டுக்கும் மத்திமமான சப்தத்தில் ஓதித் தொழும்படி உள்ள இறைக்கட்ட ளைக்கு மாறாக உள்ள நம்முடைய தொழுகை முறை ஷிர்க்.

3. ஆதம் நபி முதல், முகம்மது நபி வரை "லா இலாஹ இல்லல்லாஹ்' என்ற கலீமாவை மார்க்கமாக போதிக்க இறைவன் கட்டளை இட்டிருக்க (3:18, 21:25) முகம்மது நபியை மட்டும் கலீமாவோடு சேர்த்துச் சொல்வது அப்பட்டமான இணைவைப்பு ஆகும்.

4. நபி பெயரால் ஸலவாத்து சொல்வது ஷிர்க் ஸல்லு என்ற வார்த்தைக்கு நபிக்கு உதவி, ஊக்கம் செய்யுங்கள் என்று அர்த்தம். இதை அவர்கள் உயிருடன் உள்ள போது தான் செய்ய முடியும்.

நண்பரே மொத்தத்தில் ஹதீஸ்கள் அனைத்தும் பொய்தான். அதில் நல்லதாக ஏதேனும் தெரிந்தால் அது குர்ஆனில் கூறப்பட்ட விஷயமா கத்தான் இருக்கும். நீர் எங்களது இதழ்களை நிதானமாக ஒன்று விடாமல் படித்து குர்ஆனோடு ஒப்பிட்டுப் பாருங்கள். நிச்சயம் தெளிவு கிடைக்கும்.

**அ. ரஹீம்** : நண்பரே உங்களது கருத்துக்கள் என்னைப் போன்ற பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு உடன்பாடுதான். சரியாகத்தான் சொல்கிறீர்கள். ஆனால் அந்த, தூதர் ரஷாத் கலி (F)பா மற்றும் 19 விஷயம்தான் மனதிற்கும் ஏற்புடை யதாக இல்லை .

**மன்சூர்** : குர்ஆன் சம்பந்தப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் தூதர் ரஷாத் கலீபாவின் வழி காட்டுதல்கள் தான் எங்களுடையது. இல்லை . தூதரின் வருகை பற்றியும் 19 பற்றியும் குர்ஆன் கூறினால் ஏற்றுக்கொள்ளத்தானே செய்வீர் கள். இன்ஷா அல்லாஹ், அடுத்த முறை சந்திக்கும் போது அது பற்றி குர்ஆனை வைத்துக் கொண்டு பேசுவோம்.

# SATAN
# THE MASTER HYPNOTIST
## (Part II)

**PART - I WAS PRESENTED IN OCT. 1999 ISSUE**

11) A hypnotist can make a subject deny his own past actions.

On the day when we summon them all we will ask the idol worshipers. "Where are the idols you set up?" Their disastrous reponse will be, "By God our Lord, we never were idol worshipers." Note how they lied to themselves, and how the idols they had invented have abandoned them. (6:22-24)

The Day will come when God resurrects them all. They will swear to Him then, just as they swear to you now, thinking that they really are right! indeed, they are the real liars. The devil has possessed them, and has caused them to disregard God's meassage. These are the party of the devil. Absolutely, the party of the devil are the losers. (58:18-19)

Hypnotized Subjects Dread Exposure by the Quran's Miraculous Code

When the staff of Moses swallowed the magicians' tricks, they had sense enough to recognize that it was a great sign from God; they immediately snapped out of hypnosis.

"Throw what you hold in your right hand, and it will swallow what they fabricated. What thye fabricated is no more than the scheming of a magician. The magician's work will not succeed." The magicians fell prostrate, saying, "We believe in the Lord of Aaron and Moses." (20:69-70)

The Quran's miraculous mathematical code sweeps away all deceit and doubt about profound Quran. Certainly, those who disbelieved will wish they were submitters. (15:1-2)

But they are afraid and unwilling to snap out of hypnosis. So, their master has instructed them to wage their feeble and hopeless campaign to suppress God's miracle that proves and supports His message to the world.

They want to put out God's light with their mouths, but God insists upon perfecting His light, in spite of the disbelieers. (9:32)

Among the people, there are those who argue about God without knowledge, and follow every rebellious devil. (22:3)

The mathematical code is alerting them to the fact that they have been duped by the Master Hypnotist: that they are hypnotized. And, it is pointing out that they have perpetuated false teachings. The only way to snap out of hypnotism is to disassociate oneself from the idol worship. The idols include whateverhas been designed to "supplement" the Quran, the pristine teachings of Islam revealed to Prophet Mohammed

The messenger said, "My Lord, my peolple have deserted this Quran." (25:30)

The true followers of Islam have certain, unshakable, belief in God and the Quran alone. They are not hypnotized, for they have been freed by their only Lord - God - from the spell of the Master Hypnosit.

The Quran provides the "great criterion" that tells us if we are under the spell of Satan,

When God ALONE is mentioned, the hearts of those who do not believe in the Heareafter shrink with aversion. But when others are mentioned beside Him, they become satisfied. (39:45)

Satan advises his "Muslim" allies not to accept the Quran alone. He tells them to limit the extent that they will believe everything in the Quran. He instructs the humans to resist signs of God.

As soon as the human chooses not to uphold the word of God alone and worship God alone. The Master Hypnotist robs and strips the human of his mind. He even makes his followers believe that they are guided.

Some He guided, while others are, committed to straying. They have taken the devils as their masters, instead of God, yet they believe that they are guided. (7:30)

Part-1 was presented in Oct. 1999 issue

☆ ★ ☆

# எளிய உண்மைகள்

**குர்ஆனைப் போலவே குர்ஆனுடைய அற்புதக் கணிதக் குறியீடும் மிக எளிமையாகவும், அதே நேரம் ஆழ்ந்த சிந்தனை தேவைப்படக்கூடியதாகவும் விரிந்துள்ளது. இங்கே கூறப்பட்டுள்ள மிக எளிய உண்மைகளை உறுதிப்படுத்திக் கொள்ள நமக்கு எந்த கருவிகளும் தேவையில்லை. விரிவான அமைப்புடைய உண்மைகளை அறிந்து கொள்ள ஒரு கால்குலேட்டரோ, அல்லது கம்ப்யூட்டரோ தேவைப்படுகிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள உண்மைகளை சரிபார்த்துக் கொள்ள எந்த கருவிகளும் தேவையில்லை.**

1. குர் ஆனின் முதல் வசனமான பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பதில் இடம் பெறும் அரபி எழுத்துக்கள் ........................................................................ 19
2. குர்ஆன் 114 சூராக்களை கொண்டது 114 = ........................................................ 19x6
3. குர் ஆனின் மொத்த வசனங்களின் எண்ணிக்கை 6346 ......................................... 19x334
   (அதில் எண்ணிடப்பட்டது 6234, எண்ணிடப்படாதது 112 (பிஸ் மிக்கள்)
   6234 + 112 = 6346 கவனிக்க 6+3+4+ 6 = 19
4. 'பிஸ்மில்லாஹ்' குர் ஆனில் 114 முறை உள்ளது 114 .............................................19X6
   ( சூரா 9ல் பிஸ்மி இல்லாவிட்டாலும் 19 சூராக்கள் தள்ளி 27வது
   சூராவில் இரு முறை உள்ள) சூரா 27 வசனம் 30 ஆக 27+30 = 57.......................... 19x3
5. பிஸ்மில்லாஹ் இல்லாத சூரா 9ற்கும் பிஸ்மில்லாஹ் இருமுறை
   இடம் பெறும் சூரா 27க்கும் இடையில் இடம் பெறும் சூராக்கள்............................19
6. பிஸ்மி இல்லாத சூரா 9 முதல் பிஸ்மி இருமுறை இடம் பெறும்
   சூராவான 27 வரை கூட்டினால் (9+10+11.... 27) வரும் கூட்டுத்தொகை 342 = .....19x18
7. இதில் முக்கிய விஷயம் என்ன வென்றால் இருமுறை பிஸ்மி
   இடம் பெறும் சூராவில் முதல் பிஸ்மிக்கும் இரண்டாம்
   பிஸ்மிக்கும் இடையில் உள்ள வார்த்தைகள் சரியாக அதே 342 = ..........................19x18
8. புகழ்பெற்ற முதல் வஹீ (96:1 முதல் 5) யில் இடம் பெறும்
   வார்த்தைகள் சரியாக ........................................................................................ 19
9. 19 வார்த்தைகள் கொண்ட அந்த முதல் வஹீயில் இடம் பெறும்
   எழுத்துக்கள் சரியாக 76 ........................................................................................ 19x4
10. இறக்கப்பட்ட வரிசையில் முதல் சூராவான 96ல் இடம் பெறும் வசனங்கள் ...........19
11. இந்த சூரா, இடது புறத்திலிருந்து புரட்டினால் வருவது ..............................19வது இடத்தில்
12. 96ம் சூரா முழுதும் இடம்பெறும் எழுத்துக்கள் 304 ................................................ 19x16
13. இறுதி வஹீயான சூரா 110ல் இடம் பெறும் வார்த்தைகளும் சரியாக .................... 19
14. கடைசி வெளிப்பாட்டின் (சூரா 110:1) முதல் வசனத்தில் இருப்பது ............ 19 எழுத்துக்கள்
15. 29 சூராக்களின் ஆரம்பங்களில் வரும் 14 எழுத்துக்கள் கொண்டு அமைக்கப்பட்ட
    14 வகையான முத்திரை எழுத்துக்கள் (உம்) அலிப், லாம், மீம்) இவற்றைக்
    கூட்ட 29+14+14 = 57 = ......................................................................... 19x3
16. முத்திரை எழுத்துக்கள் அமைந்த 29 சூராக்களின் சூரா எண்களைக் கூட்ட
    (2+3+7+ ...... + 50+ 68) = 822 அத்துடன் 14 ஐக் கூட்ட (அதாவது 14 வகைகள்)
    = 822+14 = 836 = ...................................................................................19x44
17. முத்திரை எழுத்து கொண்ட முதல் சூராவான 2க்கும் முத்திரை
    எழுத்து கொண்ட கடைசி சூராவான 68க்கும் இடையில்
    முத்திரை எழுத்து இல்லாத சூராக்கள் 38 உள்ளன ............................................... 19x2
18. முதல் முத்திரை சூராவிலிருந்து கடைசி முத்திரை சூரா வரை முத்திரையிட்டதும்
    முத்திரையிடாதது மாக மாறி மாறி வருவது ............................................... 19 விதமாக
19. குர்ஆனில் 30 எண்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை 1, 2, 3,
    4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19, 20, 30, 40, 50, 60, 70,
    80, 99, 100, 200, 300, 1000, 2,000, 3,000, 5,000,
    50,000 & 1,00,000 இந்த எண்க ளின் கூட்டுத் தொகை 1,62,146 ......................... 19x8534

(முன் அட்டை தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| g. | இஸ்லாத்தின் முதல் தூணான ஷஹாதத்தில் நபி பெயரைச் சேர்த்தது. | 3:18; 37-35; 39 45 |
| 9. | முஹம்மது நபியை ஒரு கொடுமையான மனிதராக சித்தரித்து இழிவு செய்வது: | |
| a. | மனிதர்களின் கண்களை நோண்டி எடுக்குமாறு தண்டனை விதித்ததாக கூறுகிறார்கள். | 3:159; 68:4 |
| b. | முப்பது ஆண்களின் ஆண்மையை அவர் பெற்றிருந்ததாக கூறுவது. | 18:110; 25:20 |
| 10. | ஈசா நபி திரும்பி வருவார் என் போதித்து முஹம்மது இறுதி நபி என்ற உண்மையை செல்லாமலாக்குவது. இதன் மூலம் ஈசாதான் இறுதி நபி ஆகிறார். | 33:40 |
| 11. | ஏராளமான தடைகள் கொண்ட வழக்கத்தில் இல்லாத உணவு கட்டுபாட்டு முறை | 6:145-150; 16:115-116 |
| 12. | புனித மாதங்களை முன்பின்னாக்குவது | 9:37 |
| 13. | கடமையான தர்மத்தை (ஜக்காத்) சிதைத்து அதைப் புறக்கணிப்பது | 6:141; பின் இணைப்பு -15 |
| 14. | பெண்களை அடக்குமுறை செய்து அவர்கள் தலையை மூடவேண்டும் என்றும், பொருத்தமில்லாத உடைகளை அணியச் சொல்வதும் அவர்களுக்கு திருமணம், விவாகரத்து, சொத்துரிமை போன்றவற்றில் அவர்களுடைய உரிமையை மறுப்பது. | 3:195; 4:19, 32; 9:71; 2:228 |
| 15. | ஒரு குரங்கோ, ஒரு நாயோ, ஒரு பெண்ணோ தொழுபவன் முன் சென்றால் அத்தொழுகை செல்லாததாகிவிடும் (ஹதீஸ்) என்று கூறி பெண்களை இழிவு செய்வது. | |
| 16. | தொழுகை முதல், தூங்குவது, நகம் வெட்டுவது வரை ஏராளமான சட்டங்களை உண்டாக்கியது. | 5:101; 42; 21; 2:67-71 |
| 17. | தங்கத்தையும், பட்டையும் ஆண்களுக்கு தடுத்தது. | 5:48-49; 7:31-32; 3:14 |
| 18. | கலை வடிவங்களையும், இசையையும் தடுத்தது. | 7:32; 34:13; 42:21 |
| 19. | ஒரு திமிங்கிலத்தின் மீது பூமி கட்டப்பட்டிருப்பதாக கூறி இஸ்லாத்தை நகைப்புக்கிடமாக்குவது (79:30; இப்னு கஸீர், கி.பி. 1200, பென்பாஜ் கி.பி. 1975) | |

முஸ்லிம்கள் அன்றாடம் செய்யும் வரம்பு மீறல்களுக்கு இவை ஒரு சில உதாரணங்களே ஆகும். எனவேதான் இறைவன் மெய்ப்பிக்கும் தூதரை அனுப்பி வைத்திருக்கிறார்.

அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய
இறைவனின் திருப்பெயரால்

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கி ணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங் களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக் குள்ளேயே கொண்டதாக இருக் கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள் ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணி தல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

ஓர் உலகம்
ஓர்-இறை
ஒரே செய்தி

Book - Post

To

*If undelivered Please return to*

புதிய நினைவூட்டல்

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662